
www.padippakam.com

விலை.10Kr கூடவல் 9 25-9-1987



சுதந்திர(?) சிறப்பு மலர்

படிப்பகம்

www.padippakam.com



'எனக்குச் சீலை உரிஞ்சது போலப் போட்டுதப்பா?'

'ஏனப்பா"

"ராத்திரி எங்கட கொண்டாக் பமிலி விசிற் பண்ணினவை. அப்ப T.V. அக்குவேற்றரில் இலங்கையைப் பற்றிக் காட்டினவை".



அது நல்லம் தானே.

'நல்லமோ உமக்கு விசர். அதிலை வந்த வேலேஸ் உடுத்திருந்த சீலையைப் பார்த்திரே. எல்லாம் அன்-எடுக்கேற்றற் கிரவுட். ஒரு டீசன்ரான சனத்தைக் காட்டேல்லை. எல்லாம் ஊத்தையாக..... எங்களைப்பற்றி டெனிஸ்காரர் என்ன நினைப்பினம்?"


"ஓமப்பா".

# இவர்கள் எப்படி அங்கு வாழ்வது?

"இந்த டெனிஸ் கவுன்மென்ருக்கு மூளையே இல்லை."

"ஏன்"

"அக்செப் பண்ணேக்க ஒரு எடியுக்கேற்றட் சனத்தை மட்டும் அக்செப் பண்ணியிருக்க வேணும். இது எல்லாக் குப்பைகளையும் எடுத்து வைச்சிருக்கு".



"ஏன் அப்பிடிச் சொல்லுறீர்."

'டெலிபோனில் எப்பிடிச் சமைக்கிறனியள் எண்டு கிளாசிலை கேக்க ஒரு வவுனியா கேள் சேண்டு கல்லுவைச்சு எண்டு சொல்லிப் போட்டுது. எவ்வளவு டீசன்ற் இல்லாத ஆன்சர்"

தொகுப்பு: பபி, HUNDIGE.

படிப்பகம்

"பட்டுவேட்டியைப்பற்றி
கனாக்கண்டு
கொண்டிருந்தபோது
கட்டியிருந்த
கோவணமும்
களவாடப்பட்டது"

கவிஞர் வைரமுத்து



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

- குறள் -

கூவல் 9.
25-9-85.

# பேரு புள்ளடி

இலங்கையில் உள்ளோரும், இலங்கையில் உள்ளவர்களை நினைத்து சதா ஏங்கும் எம்மவர்களும் இப்போ சில நாட்களாகத்தான் தூங்க முடிகிறது.

மரணங்களின் தழும்புகள் அசைக்க முடியாத வடுக்களாக அமைந்திருந்தாலும் மரண பயம் ஏறக்குறைய அகன்ற நிலையில் இன்று நிம்மதியாகப் பெருமூச்சு விடமுடிகின்றது.

ஆனால்.....

ஆழமாகச் சிந்தித்தால் இந்த நிம்மதித் தூக்கங்களும் பெருமூச்சுக்களும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளோ என ஒருக்கால் எண்ணத் தோன்றுகிறது.

இன்று ஒப்படைப்பு என்ற பெயரில் பறித்தெடுக்கப்பட்ட ஆயுதங்களை நாளையோ நாளை மறுநாளோ எம் பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும் தூக்க வேண்டி வரலாம்.

அந்தளவு தூரம் ஒரு பாம்பின் வாயிலிருந்து தப்ப முயற்சித்து ஒரு முதலையின் வாயில் சிக்கிக் கொண்டுள்ளோம்.

அது எதிர்காலம்!

ஆனால் இன்றைய நிகழ்காலத்தில் சிந்திக்க வேண்டிய கடப்பாடுகள் மிக அதிகமே. அதையே இங்கு அலசுகிறேன் இமிலி.

துப்பாக்கிகள் இல்லை என்ற நிலையில் பதுங்கியிருந்த பாம்புகள்

படிப்பகம்

www.padippakam.com



அனைத்தும் செவ்வோர் திக்குகளால் மேல் எழுந்து மக்கள் முன் வரலாம்.

மீண்டும் தேர்தல்கள்..... வாக்குறுதிகள்.... கைதட்டல்கள்..... கனவுகள்..... கை லஞ்சங்கள்...... சட்டத்தரணிகள்..... வர்க்க பேதங்கள்... சாதிப் பூசல்கள்..... சீதனக் கொடுமைகள்---- இத்தனையும் அடங்கிய ஓர் சமுதாயம் மீண்டும் தோன்றச் சாத்தியக் கூறுகள் மிக மிக அதிகம்.

இனியாவது கண்ணைக் கட்டிக் கொண்டு புள்ளடி போடாதீர்கள் என கடிதங்களில் ஒரு வரி எழுத வேண்டிய கட்டப்பாடு நிச்சயம் எமக்கு உண்டு.

மக்களிடையே சமதர்ம நிலையை அமைக்கக் கூடிய ஓர் கட்சிதான் நாளை தனி நாட்டுக்குரிய ஓர் போராட்டத்தை வென்றெடுக்கும்.

அன்று இயக்கங்களுக்கிடையிலான வேற்றுமையும் ஒன்றைப்பற்றி இன்னொன்று மாசு கற்பிக்கும் பிரச்சாரங்களும் மிகுந்துள்ளன. இதுவல் சமதர்ம இயக்கம் ஒன்று மக்கள் மத்தியில் உள்ளதா அன்றி இனித்தான் தோற்றுவிக்கப்பட வேண்டுமோ என ஐயுறவேண்டிய நிலையில் இன்று மக்கள் உள்ளனர்.

ஆளுக்கு ஆள் துப்பாக்கிகளை நீட்ட மக்கள் சலிப்புற்றும், விரக்தியடைந்தும் மீண்டும் ஓர் துர்ப்பாக்கியத்துக்கு வாக்களிக்கலாம்.

இந்நிலைக்கு மக்கள் தள்ளப்படுவதைத் தவிர்க்க இயக்கங்கள் ஓர் தீர்வுக்கு வருமா?



“இலங்கை ஜனநாயகம் என்பது மக்களை அடக்கவும், மக்களை மயக்கவும், மக்களுக்குக் குழி பறிக்கவும் மக்களுக்காக மக்களே அமைத்துக் கொள்ளும் ஆட்சி என வரையறுக்கப்படுகின்றது.....?”

- புதுமொழி -

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் புகலிடமும் அகதிகள் ஏற்பாடும்

மோகன் கருணைரட்ணம்

"இலங்கையில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டால் 2700 தமிழ் அகதிகள் வெளியேற வேண்டும்" என்ற தொனியில் டென்மார்க்கின் மிகப் பெரிய பத்திரிகைகளில் ஒன்றான பொலிற்றிக்கன் தனது முதற்பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கையில் என்ன நடைபெறுகிறது என அறியும் ஆவல் ஒருபுறம்; மறுபுறமோ...... டெனிஸ் மக்களில் வாழ்த்தும் கூறுவோரும், எப்போது நாங்கள் உங்களிடம் வரலாம் என்று முகவரி கேட்போரும், கிண்டல் செய்வோரும், எப்போது போய்த் தொலைவார்கள் என எண்ணுவோரும். தமிழர்களை அனுப்புவதா என ஆத்திரமடைந்த உண்மையான நண்பர்களின் வேதனைகளும் அனைவரையும் சூழ்ந்து கொண்டது.

பல மொழிபெயர்ப்பாள நண்பர்களும் உண்மை நிலை என்ன என அறிந்து கொள்ள முயன்றார்கள். அத்துடன் இதழொன்றின் ஆசிரியரும் கேட்டுக்கொண்டார். இதனை வெவ்வேறு பகுதிகளில் உள்ளவர்களிடம் பேட்டி காண்பது பயன் மிக்கதாகும் எனக் கருதிப் பல நிலைகளில் எழுந்த சந்தேகங்களை ஐந்து பெரிய கேள்விகளாகத் தொகுத்து அவர்களை அணுகினேன்.

அவர்களிடம் கேட்ட கேள்விகளை முதலிலும், பின் அவர்களது பதில்களைச் சிறு சிறு குறிப்புக்களுடனும் கட்டுரை வடிவில் தொகுத்து இதில் தந்துள்ளேன்.

படிப்பகம்

www.padippakam.com



**கேள்விகள் :**

1. தாய் நாட்டில் நிலைமைகள் வழமைக்குத் திரும்பின என்ற காரணத்திற்காக அகதி அந்தஸ்துப் பெற்ற அகதி அல்லது அகதிகள் யாராவது டென்மார்க்கில் இருந்து திருப்பியனுப்பப்பட்டுள்ளனரா? ஆம் என்றால் சில உதாரணங்கள் தரவும். இல்லை என்றால் இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய சமாதான உடன்படிக்கையால் தமிழ் அகதிகளுக்கு என்ன நடைபெறும்?

2. கடந்த ஒரு வார காலமாகப் பத்திரிகைகளில் தமிழர்களைத் திருப்பி அனுப்புவது பற்றிப் பல செய்திகள் அடிபட்டன. இதனால் தமிழர்கள் ஓர் குழப்பமான சூழ்நிலையில் உள்ளனர். இவர்களுக்கு ஓர் திடமான பதிலைச் சட்டத்தின் உதவியுடன் விளக்க முடியுமா?

3. அகதிகளைத் திருப்பி அனுப்புவது என்றால் முடிவுகளை யார் எடுப்பது? பாராளுமன்றமா? நீதியமைச்சா? அன்றி வெளிநாட்டவர்க்கான இயக்குனர் திணைக்களமா (DFU)?

4. முடிவுகள் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும்? இலங்கையில் இப்போது ஏற்பட்டது ஒரு காகித ஒப்பந்தமே. இதன் நடைமுறைச் சாத்தியக் கூறுகளை ஆராய்வது எப்படி? அகதிகள் சங்கத்தில் இருந்தோ அல்லது வேறு திணைக்களங்களில் இருந்தோ யாராவது சென்று உண்மை நிலைகளை அறிந்து வருவார்களா?

5. மேற்கு ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக மேற்கு ஜேர்மனி, நோர்வே போன்ற நாடுகள் தமிழ் அகதிகளை அல்லது புகலிடம் கோரியவர்களைத் திருப்பி அனுப்பினால் அது டென்மார்க்கின் முடிவில் மாற்றங்களை ஏற்படுத்துமா?

படிப்பகம்

www.padippakam.com





Fiin Slumstrup
(D·F·H information chef)

## உங்கள் விருப்பம்:

அகதி அந்தஸ்துப் பெற்ற ஒருவரையும் டெனமார்க் இதுவரை திருப்பி அனுப்பவில்லை. ஆனால் அகதிகள் தாங்களாகவே தாய்நாடு திரும்பியிருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவு (UNHCR), அகதிகள் சங்கம் மற்றும் அகதிகளுடன் பங்காற்றும் ஸ்தாபனங்கள் யாவும் விரும்புவது யாதெனில்;

அகதிகள் ஒருவரையும் திருப்பியனுப்பக் கூடாது.
அவர்களாகவே தாயகம் திரும்ப வேண்டும்
இது ஓர் நியதியாகும்.

கடந்த வருடம் ARGENTINA, URUGUAY ஐச் சேர்ந்த சுமார் 150 அகதிகள் இங்கு 10, 12 வருடங்கள் இருந்தபின்பு தாய்நாட்டில் நிலைமைகள் நன்றாக இருந்தமையால் விருப்பப்பட்டுத் தாய்நாடு திரும்பியிருக்கிறார்கள்.

## பத்திரிகைகளின் விளையாட்டு:

தற்போது இலங்கை பற்றியும் தமிழ் அகதிகள் பற்றியும் எழுந்துள்ள நிலை பத்திரிகைகளால் தொடக்கப்பட்ட ஓர் திருவிளையாடலாகும். இதனால் தமிழ் அகதிகள் மனக்கிலேசம் அடைந்ததென்பது உண்மையே. இதுபற்றி பத்திரிகை நிருபர்களுக்கும், வானொலிக்கும் எங்கள் நிலைபற்றி நாங்கள் விளக்கம் அளித்துள்ளோம். எந்த ஒரு கட்டத்திலும் அகதி ஒருவர் திருப்பி அனுப்பக்கூடாது. நாடு திரும்புவது அவர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் இருக்க வேண்டும் என்பதே நாங்கள் கொடுத்த விளக்கமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## சட்டம் என்ன சொல்கிறது?

வெளிநாட்டினருக்கான சட்டத்தில் 19 ம் பிரிவில் ஒருவர் எந்தக் காரணத்திற்காக தனது நாட்டை விட்டு வெளியேறினாரோ அந்தக் காரணம் அவரது நாட்டிலிருந்து அகன்றுவிட்டால் அவருடைய அனுமதியை வாபஸ் வாங்குவதற்கு உரிமையுண்டு. அதுவும் அவர் டென்மார்க்கில் இரண்டு வருடத்திற்குக் குறைவாக வசித்திருந்தால் மாத்திரமே. ஒரு வேளை அப்படி நிராகரிப்பு வந்து, அந்த முடிவில் அவருக்குத் திருப்தி இல்லாவிட்டால் அவர் மேலனுமதி செய்ய வாய்ப்பு உண்டு.

## நீதியமைச்சு:

யாரையாவது வெளியேற்றுவது என்றால் அது DFU வினதும் (வெளிநாட்டினருக்கான இயக்குனர் திணைக்களத்தினதும்), நீதியமைச்சினதும் கைகளில் தங்கியுள்ளது. அவர்கள் முடிவெடுத்தால் அகதிகள் சங்கத்தைக் கலந்தாலோசியாமலே அகதிகளைத் திருப்பி அனுப்பலாம். அப்படி முடிவெடுப்பதானாலும் அவர்கள் ஒவ்வொரு தனிப்பட்ட வழக்குகளாகவே முடிவுகளைப் பரிசீலிப்பார்கள். சமாதான உடன்படிக்கை எப்படிக் கையாளப்பட்டாலும் இவர்கள் அது நல்ல முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது எனக் கருதினால் அதற்கேற்ப முடிவுகளை எடுக்கலாம். பலர் அரசியல் ஈடுபாடு இல்லாமல் யுத்தத்தின் நிமித்தம் இடம்பெயர்ந்தவர்கள். இவர்கள் பெரிதும் நாடு திரும்பவே யோசிப்பார்கள்.

## உத்தரவாதம்:

இப்போது சமாதான உடன்படிக்கை ஏற்பட்டாலும் நிலைமை சிறிது குழப்பமாகவே இருக்கிறது. இன்று நான் அறிந்த செய்தியின்படி புலிகள் இயக்கத் தலைவர் ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதித்துள்ளார். ஆனால் சிங்களவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். உண்மையாக அமைதி ஏற்பட இன்னும் சிறிது காலம் செல்லலாம். அப்படி ஓர் நிலைமை ஏற்பட்டால் நூற்றுக்கணக்கான தமிழ் அகதிகள் தாய்நாடு செல்ல வரிசையில் வந்து நிற்பார்கள் என நான் நினைக்கிறேன். அப்படியான --

படிப்பகம்

www.padippakam.com



ஒரு கட்டத்தில் அவர்கள் தமது நாட்டில் நிலைத்தோர் வாழ்க்கை அமைக்க அல்லது ஸ்திரமான ஓர் சூழ்நிலையில் வாழ நாங்கள் உதவி செய்வோம்.

**ஜேர்மன், நோர்வே:**

மேற்கு ஜேர்மனி தமிழர்களைத் திருப்பியனுப்பத் தொடங்கினால் இங்கும் யாராவது கேட்பார்கள். ஏன் நாங்களும் அப்படிச் செய்யக் கூடாது என. நோர்வே அனுப்பினால் அது மிகவும் மோசமாகவே டென்மார்க்கைப் பாதிக்கும். பத்திரிகைகள் தமது விமர்சனங்களைத் தொடுக்கும். இங்கு வெளிநாட்டவரை வெறுக்கும் ஒரு கட்சி உள்ளது. அது பாராளுமன்றத்திலேயே "ஏன் தமிழர்கள் அனுப்பக்கூடாது" எனக் கேள்வி எழுப்பலாம். அப்படியான கட்டத்தில் பாராளுமன்றத்திலேயே விவாதம் ஏற்படலாம்.

இப்படியான கட்டத்தில் பலரும் எங்களை விமர்சிப்பார்கள். ஏனெனில் "அகதிகள் நிலைமைகள் வழமைக்குத் திரும்பிய பின்பு நாடு திரும்புவார்கள்" என நாங்கள் (அகதிகள் சங்கம்) எப்போதும் சொல்லிவந்தோம். எனவே இந்நிலையில் நாங்களும் விமர்சனத்துக்குள்ளாவோம்.




Frik Just
(Fredriksborg Amts Leder)

இவர் முன்பு RINKOBING AMT தலைவராக இருந்தவர். இதன் கீழேயே HERNING, HOLESTEBRO, LEMVIG, TARM ஆகிய நிலையங்கள் இருந்தன. கிட்டத்தட்ட 1000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்த நிலையங்களில் இருந்தனர். இருக்கிறார்கள். அத்துடன் இவர் தமிழர்கள் பற்றி நல்லெண்ணம் கொண்டவர். எனவே இவரது கருத்தை

படிப்பகம்

www.padippakam.com



அறிவது முக்கியமானது எனக் கருதி அவரை அழைத்தேன்.

**இதுவரை இல்லை:**

டென்மார்க்கில் அகதி அந்தஸ்துப் பெற்ற எவரும் இதுவரை திருப்பியனுப்பப்படவில்லை. ஆனால் லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பல அகதிகள் தாங்களாகவே விருப்பப்பட்டு நாடு திரும்பியுள்ளார்கள். தமிழர்களைப் பற்றி உத்தியோக பூர்வமாக எதுவும் எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. ஆனால் ஒரு உறுதியான நிலை ஏற்படும்வரை டென்மார்க் தமிழர்களைத் திருப்பி அனுப்பாது. அப்படி ஏதாவது முடிவுகள் எடுக்கப்படுவதானால் அது அவரவர் கொடுத்த வாக்கு மூலங்களுக்கிணங்க தனிப்பட்ட வழக்குகளாகவே பரிசீலிக்கப்படும்.

சமீபத்தில் நிலையத்தலைவர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தமிழர்களைத் திருப்பி அனுப்பக்கூடிய ஒரு நிலை வருமானால், உயர் கல்வி, தொழிற்கல்வி என்பவற்றைக் கற்கத் தொடங்கியவர்களையும் வைத்திய சிகிச்சை பெறுபவர்களையும் இங்கு தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என அக் கூட்டத்தில் நான் கூறினேன்.

**முடிவு:**

ஒன்றில் இது ஓர் அரசியல் முடிவாக இருக்கும் அல்லது (DFU) வெளிநாட்டினருக்கான இயக்குனர் திணைக்களம் எடுக்கும் முடிவாக இருக்கும். அகதிகள் சங்கத்திற்கு இதில் தலையிட உரிமை இல்லாவிட்டாலும் நாங்கள் சில கோரிக்கைகளை முன்வைக்கலாம். தமிழர்கள் இடம் பெயர்ந்தமைக்கான காரணம் அகன்றுவிட்டால் எங்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படலாம்.

**பத்திரிகைகளின் பங்கு:**

பத்திரிகைகள் மக்கள் மனங்களைக் குழப்பும் என்பது உண்மையாக இருந்த போதிலும் அதனால் ஒரு முடிவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது. டெனிஸ் மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



பத்திரிகைகளில் வரும் செய்திகளை அப்படியே எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அதைச் சீர்தூக்கியே பார்ப்பார்கள். சமாதானம் சமாதானம் என்று பத்திரிகைகள் கூக்குரலிட்டாலும் அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என ஆராய்வார்கள். தமிழர்களிடையே உள்ள உள் குழப்பங்களை ஆராய்வார்கள். வடக்கு JYLLAND இல் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று "தமிழர்களே! உடனே வெளியேறுங்கள் என்று செய்தி வெளியிட்டிருந்தது. இது பத்திரிகைத் தர்மத்திற்குப் புறம்பானது. இவ்விடயத்தைத் தொடக்கிய POLITIKAN பத்திரிகையே செய்திகள் வெளியிட்டதே தவிர தமிழர்களை அனுப்பு என எழுதவில்லை.

## டென்மார்க்கின் நிலை:

ஜேர்மன், நோர்வே போன்ற நாடுகள் தமிழர்களைத் திருப்பியனுப்பினாலும் அது டென்மார்க்கின் முடிவை மாற்றாது என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில் அகதிகளை அங்கீகரிக்கும் விடயத்தில் மற்றைய நாடுகள் பின்தங்கிய போதும் டென்மார்க் அவர்களை அங்கீகரித்தது. அதே போலவே இது விடயத்திலும் டென்மார்க்கிற்கென்று அகதிகள் விடயத்தில் ஓர் கொள்கை உண்டு.

## டென்மார்க் வானொலி:

இப்பேட்டியின் இறுதியில் (DFU) வெளிநாட்டினருக்கான இயக்குனர் திணைக்களத் தலைவரைப் பேட்டி காண ஒழுங்குகள் செய்திருந்தேன். அதற்கிடையில் டென்மார்க் வானொலி அவரைப் பேட்டிகண்டிருந்தது. இதில் அவர் தாங்கள் இதுபற்றி இன்னும் ஒன்றுமே சிந்திக்கவில்லை என்றும் திரும்புவதானால் தமிழர்கள் தாங்களே முடிவுசெய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். ஆதலால் அவரைப் பேட்டி கண்டு மேலும் குழப்ப வேண்டாம் என்று பேட்டியைக் கைவிட்டேன். முடிவுகள் எடுப்பதானால் DFU தான் எடுக்கும். அவர்கள் இதுபற்றி ஒன்றும் சிந்திக்காதபடியால் நிலைமை மோசமடையவில்லை என்றே கூறவேண்டும்.

## நடந்தது இது தான்:

பொலிற்றிக்கன் பத்திரிகை நிருபர் ஜேர்ன் கையில் ஒரு வெளியூர்த் தந்தி. அதில் .

படிப்பகம்

இலங்கையில் இரு தினங்களில் சமாதான ஒப்பந்தம். ஐரோப்பாவில் இருக்கும் தமிழர்களின் நிலை." தந்தியில் இருந்த வாசகம் இவ்வளவே. உடனே அவர் அகதிகள் சங்கத்துடன் தொடர்பு கொள்ள----- அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க----- அடுத்த நாள் காலை POLITIKAN இல் முதல்பக்கத்தில் செய்தி. "2700 தமிழர்கள் வெளியேற்றமா?" னெ— ஆறல் இரண்டு நாட்களின் பின் POLITIKAN ஆசிரியர் தலையங்கத்தில் தமிழர்களை வெளியேற்றுவது நல்லதல்ல என்ற தொனியில் கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது.



Søren Peder (Journalist)



Mohan Karunaratnam[Tolk]

SOREN PEDER கொப்பனேகனில் இருந்து வெளியாகும் ஓர் பத்திரிகையில் சமூக அமைப்புப்பற்றி எழுதும் நிருபராவார். இதன் கீழேயே அகதிகளும் வருகிறார்கள். இவ்விடயம் சம்பந்தமான அவரது கூற்று வருமாறு.

தமிழர்களின் சமாதான உடன்படிக்கை பற்றிய நிலை வந்தவுடன் எங்கள் ஆசிரியர்கள், நிருபர்கள் கூட்டத்தில் இதுபற்றி விவாதித்தோம். முடிவில் தமிழர்களுக்குச் சார்பான நிலை எடுத்தது. அதன்படி மறுநாள் பதிப்பில் "நிச்சயமற்ற உடன்படிக்கை" என்ற ஆசிரியர் தலையங்கத்துடன் தமிழர்கள் விடயத்தில் நிதானமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றவாறு கட்டுரை வெளிவந்தது. இது பத்திரிகையின் நிலைப்பாடாகும்.

## தமிழர்கள் பற்றி SOREN PEDER:

தமிழர்கள் பற்றி டெனிஷ் மக்களிடையே உயர்ந்த கருத்துப் பரவியுள்ளது. பொதுவாக


www.padippakam.com


மற்றைய இன அகதிகளுடன் ஒப்பிடும் போது டெனிஸ் மக்கள் தமிழர்களை மதிக்கிறார்கள். ஆகவே அவர்களை வெளியேற்றும் அளவுக்கு முன் வரமாட்டார்கள் - உறுதியான சமாதானம் ஒன்று ஏற்பட்டு தமிழர்கள் தாங்களாகவே வெளியேறும் வரை டெனிஸ் மக்கள் அவர்களை விரட்ட மாட்டார்கள்." இவ்வாறாக SOREN PEDEN தமிழர்களைப் பற்றிக் கூறியுள்ளார்.

நான் சந்தித்த பொறுப்பான பதவி வகிக்கும் பலரும் தமிழர்களை டென்மார்க் திருப்பியனுப்பாது இதனால் அவர்கள் தாங்களாகவே திரும்ப வேண்டும் என்ற கருத்துப்படவே கூறியுள்ளனர். இப்போது எங்களில் உள்ள நல்லெண்ணமும் சமாதானம் நிச்சயமற்றதாக இருப்பதும் நிலைமையை மோசமாக்கவில்லை.

ஆனால் இது எவ்வளவு நாட்களுக்கு? ஆதனால் இந்நாட்டிலுள்ள வளங்களைப் பாவித்து உயர்கல்வி, தொழிற்கல்வி என்பவற்றில் தேறினால் "எப்போதும் நாங்கள் நாடு திரும்பத் தயாராக உள்ளோம்" எனக் கூறலாம்.

"கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு".



# தமிழ் நாவல்களில் மனித விமோசனம்

வாசகர்களுக்கு நல்ல தரமான இந்திய மற்றும் வெளிநாட்டுப் படைப்பிலக்கியங்களை அறிமுகப்படுத்த விருப்புக் கொண்டே கடந்த கூட்டங்களில் இந்திய இறக்குமதி கல்லறை வாசகம் போன்ற பகுதிகளைப் பிரசுரித்திருக்கிறோம்.

இங்கு தமிழ் நாவல்களில் மனித விமோசனத்துக்கு வழி கோலிய நாவல்களில் ஒன்றான சுந்தர ராமசாமியின் புளியமரத்தின் கதை பற்றிய விமர்சனத்தைத் தருகிறோம். இவ்விமர்சனம் சே. ப. சிவபாதசுந்தரம் அவர்களால் கருத்தரங்கொன்றில் வாசிக்கப்பட்டது.

இந்த மனித விமோசனம், அன்றி மனிதப்பிரச்சனைகளுக்கு எதிர்வு கூறல், வாசகனைச் சிந்திக்கத் தூண்டல் போன்ற பண்புகளைக் கொண்ட இலக்கியங்கள் இன்றைய நிலையில் எமக்கு மிக அவசியம். இதைக் குறிப்பிட்டு இங்கு எழுதுவதற்குக் காரணம் குயிலியின் கரம் கிட்டி பிரசுரிக்க முடியாமல் இருக்கும் பல சிறுகதைகளாகும். அத்தனையும் மிகச் சிறப்பாக சிறுகதை கட்டத்துக்கு அமைய எழுதப்பட்டிருப்பினும் அவற்றில் கையாளப்பட்ட கரு காதலாகும். கற்பனை உலகத்தில் எம் சுகங்கள் பறிபோய் நிஜ உலகத்தில் போராடிப் பெற வேண்டிய காலத்தில் எழுத்தாளர்களை நிஜ உலகிற்குச் சற்றே அழைக்கிறாள் குயிலி.

காதல் கதைகள் எழுதக்கூடாது என கம்பிவேலி நாம் கட்டவில்லை. தாராளமாக எழுதலாம். இன்றைய நிலையில் இரண்டு காதலர்கள் படும் பாடுகள் எத்தனையோ . . . . . பிரச்சனைகளில் நசிவுற்ற காதல்கள் எத்த-

www.padippakam.com



சினிமா. அவை மிகுக்க மிகுக்க வரவேற்கப்படுகின்றன. அவைத் தாடி வளர்க்கவும், ரசிகர் கூட்டம் கைக்குட்டையை கண்ணீரில் தோய்க்கவும்..... அன்றி பஞ்சணையில் படுத்து கனவு காணும் கதைகளை விட்டு கொஞ்சம் வெளியே வர வேண்டும் என குமிலி வேண்டுகிறேன்.

இவை எல்லாவற்றையும் சற்றுத் தள்ளி வைத்துவிட்டுப் பாருங்கள். நாம் வாழும் சூழலை நோக்குங்கள். அந்த சமுதாய அமைப்புக்களைப் பாருங்கள். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், சாதி, வர்க்கப் பிரச்சினைகள், சீதனக் கொடுமைகள்...... இவ்வாறாக பல பிரச்சினைகள் மலிந்து கிடக்கின்றன. உளுத்துப் போன சமுதாய அமைப்பு ஐயா எமது அமைப்பு. அது நிச்சயம் மாற வேண்டும் எனத் துடிக்கிறாள் இந்தக் குமிலி. இருட்டில் கிடக்கும் இந்தச் சமுதாய இலக்கித்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவர எமக்கு காத்திரமான இலக்கியங்கள் தேவை. அதற்காகவே இந்தச் சின்ன விமர்சனத்துக்கு இத்தனை நீண்ட முன்னுரை.

நேரடியாக புளியமரத்தின் கதை என்ற நாவலை அனைத்து வாசகர்களுக்கும் தரமுடியாது இருப்பதனாலேயே அதன் விமர்சனத்தை இங்கே தருகிறோம். இந் நாவலில் ஒரு கரு எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

## ஒரு புளியமரத்தின் கதை—சுந்தர ராமசாமி

புளியமரத்தின் கதையில் ஒரு குறிப்பிட்ட சூழலில் உருவான விதத்தையும், பல்வேறு மக்கள் கூட்டம் நடமாடிய விதத்தையும், விருப்பு வெறுப்புகள் வளர்ந்த வரலாற்றையும் முடிவில் சமுதாயச் சீரழிவோடு புளியமரமும் அழிவுற்றதையும் சுந்தரராமசாமி படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

இதில் நடமாடும் பாத்திரங்கள் பல. பழம்பெரும் முதியவராகத் தோற்றமளித்து வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் தாமோதர ஆசான். குளக்கரையில் உமிக்கரி விற்றுப் பின்னர் பங்களாவும் காரும் பெற்ற வர்த்தகப் புள்ளி காதர். வெற்றிலை பாக்குக் கடைக்காரர்களின் சங்கம் என்ற ஏணி மூலம் முன்னேறிப் போட்டி வர்த்தகப் பிரமுகரான தாமு, முனிசிப்பல் தேர்தலில் போட்டியிட்ட கடவேத் தாத்தா. எல்லாப் பாத்திரங்களும் ஒரு புளியமரத்தைச் சுற்றி வட்டமிட்ட பாத்திரங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



புளியம்பழம் நோக்கித் தோட்டிதன் கல்லெறிய காதரின் கடைமுன் விளங்கிய விளம்பரக் கண்ணாடி உடைய அந்தக் குற்றம் போட்டி வியாபாரி தாமு மேல் சுமத்தப்படுகிறது. ஆனால் குற்றம் நிரூபிக்கப்படாமலே தாமு வெளியேறுகிறான். பின்னர் தாமுவின் சதியாலோசனை காதர் வியாபாரத்தைத் தாக்க தாமுவின் போட்டி வியாபாரம் மேலோங்குகிறது.

ஜங்ஷனில் நிற்கும் புளியமர நிழல் தான் தாமுவின் வியாபாரப் பெருக்கத்துக்குக் காரணம் என்று உபதேசம் செய்த பத்திரிகை ஆசிரியர் இசக்கி புளியமரத்தை அழிக்கத் தூண்டிவிடுகிறான். ஜங்ஷன் புளியமரம் போக்குவரத்துக்குத் தடையாயிருக்கிறதென்று முனிசிபாலிட்டி தீர்மானம் நிறைவேற்றி, வெட்டுவதற்கும் ஏற்பாடாகிறது. ஆனால் பொது ஜனங்கள் குறுக்கிட்டு மரம் கோயிலாகிறது. இருந்தும் ஒரு கூலி ஐயப்பன் உதவியால் மரத்தில் நஞ்சூட்டப் பெற்று மரம் உயிர் பிரிகிறது. புளியமரத்தின் வாழ்வோடு தாமு, காதர் வாழ்வும் சீரழிகிறது. கடலை விற்று வயிறு வளர்த்த கிழவன் முனிசிபல் தேர்தலில் வெற்றி பெற்றும் அந்த அந்தஸ்தில் பொருள் காணாமல், கடலை விற்கும் தொழிலுக்கே திரும்புகிறான். போட்டி வியாபாரிகள் சீர்குலைந்து தங்கள் தங்கள் கிராமங்களுக்கே திரும்பி விடுகின்றனர்.

இந்த நாவலில் மனிதர்களைவிட புளியமரத்துக்கே முக்கியத்துவம் கிடைக்கின்றது. ஆசிரியர் சொல்கிறார்:

“சொல்லப்போனால் புளியமரம் என்ன செய்தது? சும்மா நின்று கொண்டுதானே இருந்தது. மனிதனின் அவ்வளவு விளையாடல்களுக்கும் மௌன சாட்சியாக நின்றதே அல்லாமல் எதிலாவது பங்கெடுத்துக் கொண்டதா? பட்டுக் கொண்டதா? மனிதனின் சிரிப்பையும், கண்ணீரையும், கண்ணீரே சிரிப்பாக வெளிப்படுவதையும், சுயநலத்தையும், தியாகத்தையும் தியாகத்தில் கலந்து போயிருந்த சுயநலத்தையும், பொறுமையையும், அன்பில் பிறந்த துவேஷத்தையும் பார்த்தபடி நின்றதே அன்றி வேறென்ன செய்தது? மனித ஜாதிக்கு அது இழைத்த கொடுமைதான் என்ன? யாரைப் பார்த்துக் கைநீட்டியது? யாரை நோக்கிப் பல்லிளித்தது? யாருடனாவது சேர்ந்து கொண்டு யாருக்கேனும் குழி பறித்ததா?”

படிப்பகம்

www.padippakam.com



கே: B.T உங்களிடம் பேட்டி காண வருகிறார்கள் என அறிந்த பொழுது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

ப: என்னுடன் கூட இருந்தவர்கள் பலரால் இப்படித்தான் பதிலளிக்க வேண்டும் என நெறிப்படுத்தப்பட்டுக் கொண்டு இருந்தேன். அந்த நிர்ப்பந்தமான சூழ்நிலையில் இருந்து தப்பி என்னை நான் தயார்ப்படுத்த வேண்டிய நிலையில் இருந்தேன்.

கே: பின் இலங்கையின் நிலைப்பாட்டை அறியும் பொழுது உங்கள் உறுதியில் ஏதாவது மாற்றம்?

ப: நிச்சயமாக இல்லை. சிங்களவன் அடிக்கிறான் என்ற நிலை போய் இந்தியன் அடிக்கிறான். இந்தியனை வெளியேறு" என்ற கோஷம் எழும் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. அந்தப் போராட்டத்துக்கு ஓர் பங்களிப்புத் தேவை என நினைக்கிறேன்.

கே: VI VIL HJEM என மகிழ்ச்சியுடன் கூறியிருக்கிறீர்கள். அங்கு போகும் போது நாட்டின் போராட்டத்தில் நேரக்கால பங்களிப்புச் செய்யவில்லையே என்ற குற்ற உணர்வு உங்களுக்குத் தோன்றுதா?

ப: இப்போதும் குற்ற உணர்வு இருந்து கொண்டுதான் இருக்கிறது. இனியும் அது தாமதிக்கக் கூடாது என நினைக்கிறேன்.

கே: உங்கள் பேட்டியில் 'VI' எனக் குறிப்பிட்டது தங்கள் குடும்பத்தையா அன்றி அனைத்துத் தமிழ் அகதிகளையுமா?

VI எனக் குறிப்பிட்டது என்னையும், மனைவியையும், பிள்ளையையும் தான். கூடவே டென்மார்க்கில் வாழும் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலை எனக்கு வரப்போவதும் இல்லை. நான் தலைமை தாங்கவும் இல்லை. அந்த நிலையும் எனக்கில்லை. பொதுமைப்படுத்திப் பார்த்தது பார்த்தவர்கள் குற்றமே தவிர எனது குற்றமல்ல.

படிப்பகம்

www.padippakam.com



கே: நாட்டில் அமைதி ஏற்பட்டாலும் எத்தனையோ மக்களுக்கு சில பொருளாதாரத் தேவைகள் இருக்கும். தங்களின் இப் பதில் ஒரு பத்திரிகையில் வெளியாகும் போது அது ஏனைய தமிழர்களின் மனங்களைச் சற்றுக் கலக்கத்துக்குள்ளாக்கும் என நினைக்கவில்லையா? ஏன்?

ப: இல்லை. அது எனது சொந்த அபிப்பிராயம். அது மற்றவர்களைக் கவரப்படுத்தத் தேவையில்லை என நினைக்கிறேன்

கே: இன்றைய இலங்கையின் நிலையைப் பார்த்தால் மீண்டும் ஓர் அகதி நிலைக்கு மக்கள் தள்ளப்படலாம் என ஐயுறுகிறேன். அவ்வாறு மீண்டும் ஓர் அகதிவாழ்வை எதிர்நோக்குவீர்களா?

ப: நிச்சயமாக இல்லை. மீண்டும் அகதியாகாமல் நாட்டிலேயே இறந்தாலும் பரவாயில்லை என நினைக்கிறேன்.

கே: போராட்டத்துக்குப் பொருள் உதவி செய்த மக்களை நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நிலை வரும் போது தயங்குவதை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இன்று அங்கு போய் அடுத்து என்ன செய்வது என்று யோசிக்கிறார்கள். அடுத்து மீண்டும் அகதியாக வேண்டிய நிலை வந்தால் என்ன செய்வது என்று சிந்திக்கிறார்கள்.

கே: இந்த ஒப்பந்தத்தால் உயிர்ச்சேதங்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பினும் எமது அரசியல், பொருளாதார, சமூக நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என நினைக்கிறேன். கூடவே போராட்டத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்த நிலை. இந்த நிலையில் மக்களுக்குச் சிந்தனை உணர்வை ஊட்டக்கூடிய ஒரே ஆயுதம் பேனாதான். அந்த வகையில் இனி இலங்கையில் உங்கள் பங்களிப்பு

படிப்பகம்

www.padippakam.com



எவ்வாறு இருக்கும்?

ப: இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின் அழிந்து போன இடதுசாரி இயக்கங்கள் மீண்டும் உயிர் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் இன்று காணப்படுகின்றன. ஏனெனில் மூன்றாவது வல்லரசான இந்தியாவை எதிர்க்கக் கூடிய கோட்பாட்டின் கீழ், தமிழ் - சிங்கள இனவாதத்தை மறந்து மீண்டும் பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசு ஒன்று முழு இலங்கையை அடக்கியோ அன்றி ஈழத்தை அடக்கியோ எதிர்காலத்தில் உருவாகும் என நினைக்கிறேன். இத்தகைய அமைப்பின் கருத்துக்களுக்குப் புறம்பாக இதுவரை நான் எழுதவில்லை. அவ்வாறே இனியும் தொடர்வேன்.

கே: ஆமாம். உங்களுடைய படைப்புக்களில் இதை நான் அவதானித்திருந்தேன். அதற்கு உங்களுக்கு வழி கோலிய ஏதாவது சம்பவங்கள்....... அன்றி காரணங்கள் பற்றி?

ப: பொருளாதாரச் சமத்துவமே எமது இனத்தின் விடிவுக்கு வழி கோலும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான். எனது முதல் சிறுகதையே "தேசதம்" என்பதாகும். இதன் கதாநாயகன் யாழ்ப்பாண பஸ்ராண்டின் ஓர் பிச்சைக்காரனாகும்.

கே: தங்களின் "ஈழம் எங்கு வருகிறது" என்ற நாவல் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பாடுபடும் ஓர் பெண்ணைப் பற்றியதாகும். இப்போது உள்ள இலங்கையில் அப் பின்னணியில் முழுச் சமுதாயமும் ஓர் சாதிப்பிரதிஷ்டை செய்த உணர்வுடன் நோக்க வழியுண்டு. அவர்களைப் பற்றி.......

ப: அப்படி ஓர் சிறு ஏற்பட இடம் உண்டு தான்.

www.padippakam.com



ஆனால் அப் பெண்கள் சமுதாயத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் கடமையுணர்வுடன் போட்டி போடும் மனப்பக்குவம் வாய்ந்தவர்களாகவும் பயிற்றப்பட்டுள்ளனர்.

கே: அடுத்து, இன்று துப்பாக்கிகளின் பயம் இல்லை என்ற நிலையில் ஒழிந்தும் மறைந்தும் பாதுகாப்புகளில் இருந்த பழைய அரசியற் புள்ளிகள் பழைய வேதாந்தங்களுடன் மக்கள் முன் வரும் போது தங்கள் மனநிலை எவ்வாறு இருக்கும்?

ப: அந்தக் கூட்டத்துக்கு எதிராக மீண்டும் துப்பாக்கிகள் எடுக்க வேண்டும் என்ற நிலையில் இருக்கும்.

கே: சரி, அதிக இராணுவம் நாட்டில் இல்லை. நாட்டில் உள்ள இளைஞர்களுக்கிடையேயும் இயக்கப் பிரச்சினைகள். இந்த நிலையில் மக்கள் முன் செல்லும் பழைய அரசியல்வாதிகள் அந்த இடைவெளியைத் தாம் பயன்படுத்தலாம் என நினைக்கிறார்களோ? அல்லது மக்களை இனியும் மயக்கலாம் என நினைக்கிறார்களோ?

ப: உண்மையில் மக்கள் இன்னமும் நியாயப்படுத்தப்படவில்லை. கூடவே மக்களை எப்படிக் கவர வேண்டும், மயக்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் நன்கு பயிற்றப்பட்டு உள்ளனர்.

கே: மக்களே, எம்மிடையே உள்ள சமூக அமைப்பு முறைகள் பிழை. சமதர்மமான நிலையே தேவை எனக் கதைக்கிறார்கள். ஆனால் நடைமுறை என வரும் போது அதைக் கடைப்பிடிக்க முடியாமல் தவறுகிறார்கள். அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நடைமுறையில் உள்ள சமுதாயத்தைப் பிறழ்ந்து வாழ யாரும் விரும்ப மாட்டார்கள். ஆகவே முதலில் அமைப்பு

படிப்பகம்

www.padippakam.com



மாறவேண்டும். அவ்வாறு அமைப்பு மாறின் இந்தப் பிரச்சனையும் அழியும். ஆகவே மக்களைக் குறை கூறிப் பயனில்லை. கூடவே கூறப்போனால் விடுதலையை முன் எடுத்துச் சென்ற இயக்கங்கள் அனைத்தும் இடதுசாரிப் பார்வை கொண்டன. அவ்வாறான ஒரு கட்டமைப்பு மீண்டும் வெளிக் கொணரப்பட வேண்டும். அப்போதுதான் சமநிலை உருவாக முடியும்.

கே. உண்மை தான். தங்கள் எண்ணம் ஈடேற வாழ்த்திக் கொண்டு... குயிலோசை வாசகர்களுக்கு நீங்கள் தெரிவிக்க விரும்பும் செய்தி அன்றி கருத்து...?

ப: இது சிறப்பு மலராக இருப்பதனால்..... தாய்நாடு எமக்கு இலங்கை. தாய் நாட்டை விட்டு வெளியே வந்து தாய்நாடு என்று கூறக் கூச்சப்படுபவர்களுக்கும், தாய் நாடு என்று கூறிக் கொண்டு, அந்த நாட்டுக்குச் செல்லத் தயங்குபவர்களுக்கும் ஒன்று கூற விரும்புகிறேன் தாய் நாடு என்பது படிக்கவும், ஏசவும், பேசவும் உரிமை உள்ள ஒரு நாடு. அந்த உரிமை எமக்கு எங்கு கிடைக்கிறதோ அதுதான் தாய்நாடு. உரிமை கிடைக்கும் இடத்தைப் போய்ச் சேர்வதுதான் நல்லது என்பது தான் என் அபிப்பிராயம். இதையே வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கே: நன்றி. வணக்கம்.

மு: வணக்கம்.


(49 ம் பக்க தொடர்ச்சி)

சிந்தனைகள் பரந்துபடாததினால் அவர்களுக்கும் தம்மைப்பற்றிய உணர்வுகள் வரவில்லை. இவ்வேளைகளில் மத்தியதர வர்க்க சிந்தனைகள், கூட வறட்டுக் கௌரவங்களையும் பழைய சாதிப்பாகுபாடுகளையும் சார்ந்தே இருந்தது. எல்லா வட்டத்தினரிடையேயும் சிந்தனை பரந்துபடாது அந்தந்த வட்டங்களைச் சுற்றி வேலி போட்டுக் கொண்டு இருந்தன. 60 களில் ஏற்பட்ட முற்போக்குச் சிந்தனைவாதிகளின் சிந்தனைகள் முக்கிய மட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்தன. எனினும் சமுதாயம் அதற்கும் அசையவில்லை. ஆனால் அவர்கள் கூறிவந்ததை இயக்கங்கள் செயலளவில் கடைப்பிடிக்க முற்பட்டதனால் சமுதாயத்தில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. ஆனால் இன்றைய சமாதான உடன்படிக்கையினால் ஏற்பட்ட இயக்கங்களின் வீழ்ச்சி பழைய சமுதாயம் தோன்ற காரணமாகலாம். இவ்வேளையில் மக்கள் சிந்தனைகளை விழிக்க வேண்டும் ✱

படிப்பகம்

www.padippakam.com


# சுதந்திரபுரம் தபாற்காரன்




சிறுகதை: முல்லையூரான்

சுதந்திரபுரம் ஒரு சின்னக் கிராமம். காடுகளும் வயல்களும், நீரோடைகளும் நிறைந்த ஒரு அழகான கிராமம். அங்கு மூன்று பேர் மட்டுமே வேலை பார்க்கும் ஒரு தபாற்கந்தோர். அங்கேதான் செல்வத்துரை அண்ணன் பியோனாக வேலை பார்க்கிறார். நல்ல திடகாத்திரமான உடம்பு. காக்கிக் கோட்டையும் மீறி எட்டிப்பார்க்கும் நெஞ்சு மயிர்கள். விசாலமான முகம். பரந்த நெற்றி. எப்போதும் அதில் திருநீற்றுக் குறி நிமிர்ந்து நிற்கும். பெரிய காற்சட்டை. கால் மயிர்களும் சுதந்திரமாய் நிற்கும்.

இந்த உடுப்போடு ஒன்றிவிட்ட பிறகு ஏதாவது தீர்த்தம், திருவிழா என்றால்தான் ஓரிருமுறை கழற்றப்படும். சட்டத்துக்கு இந்த மரியாதை. தபால் சேவகர்களுக்கான சீருடை அறிமுகப்படுத்தப்பட்ட அன்றிலிருந்து அவர் இந்த உடுப்பை அணியாமல் தபாற்கந்தோர் வேலை பற்றிப் பேசவே மாட்டார். அவ்வளவு தொழிலில் ஒருவித பயபக்தி நன்றாக வளர்ந்துவிட்டது. எப்போதும் முகச்சவரம் செய்து கொள்வார். சுதந்திரபுரத்துக்கு செல்வத்துரை அண்ணன் தபாற்காரனாக வேலைக்குச் சேர்ந்ததிலிருந்து எந்தவித குற்றம் குறையுமில்லாமல் வேலை செய்து வருகின்றார்.

அவருக்கு ஒரு சைக்கிள். ஓலைக் கூரையாயிருந்த தபாற்கந்தோருக்கு 1955 ம் ஆண்டு ஓடு போடப்பட்ட போது வாங்கப்பட்ட சைக்கிள் இன்றைக்கும் ஒரு தனியிரும்பாக நின்று அவரோடு வாழ்கிறது. ஆனால் அழைப்பு மணி மட்டும் கடைசிவரையும் அடிக்கப்படாமலேயே கழன்றுவிழுந்து விட்டது. ஒரு தபாற்காரனுக்கு சைக்கிளும் பெல்லும் மிகமுக்கியம். ஆனால் செல்வத்துரை அண்ணனைப் பொறுத்தவரையில் அது பெரிய முக்கியமல்ல. ஏனென்றால் ஓங்கிக் குரல் கொடுத்தே

www.padippakam.com



விலாசதாரரை வாசலுக்கு அழைத்துவிடுவார். இது அவரது வழக்கம். கொஞ்சம் வாசலுக்கு எட்டியுள்ள வீடுகளுக்கு நேராகவே திண்ணைவரை போய்விடுவார். திண்ணைவரை சென்றால் வெற்றிலை கமகமக்க ஒரு போடு போட்டு ஊர்வம்பெல்லாம் அளந்து கட்டி பொழுது விடிவதற்குள் மீண்டும் எப்படியும் தபாலகம் திரும்பிவிடுவார். ஊரில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கெல்லாம் செல்வத்துரையண்ணர் ஒரு வரப்பிரசாதம்.

இவர்தான் இன்றும் வழக்கம் போல் தபால்களைக் கந்தோரிலிருந்து சேகரித்துக் கொண்டு ஊருக்குள் புறப்படக் கந்தோரில் புகுந்தார். இன்று சுதந்திரபுரத்துக்கு ஒரே ஒரு கடிதம் தான். எடுத்துப் பார்த்தார். கணபதி. 10ம் கட்டை. சுதந்திரபுரம் என்று விலாசமிடப்பட்டிருந்தது. பெரிதாகச் சிரித்துக் கொண்டார் செல்வத்துரை அண்ணன். "என்னடா நான் வேலைக்குச் சேர்ந்ததிலிருந்தே ஒரு தபால் கூட வராத கணபதிக்கு இன்றைக்குக் கடிதம்" என முணுமுணுத்தபடி சைக்கிளில் ஏறினார். அதுவும் பத்துக் கட்டை சைக்கிளோடி அவனுக்குத் தபால்கொண்டு போக வேண்டியுள்ளதே என்று மனம் சலிப்பவரில்லை செல்வத்துரை அண்ணன், கடமை வீரராயிற்றே. சைக்கிள் சுதந்திரபுரத்தில் இறங்கிவிட்டது.

வீதிகளில் புனரமைப்புப் பணியில் ஊர் மக்கள் பலர் ஈடுபட்டிருந்தனர். தலையில் கூடையுடன் மண் சுமக்கும் பெண்களும் மண்வெட்டிகளுடன் ஆண்களுமாய் நல்ல ரம்யமான காட்சி. சூரியன் ஒரு பனை தூரத்துக்கு மேலே வந்திருந்தான். மாநில சுயாட்சிக்குப் பின்பு ஊர் திருந்தத் தொடங்கியுள்ளது. தீவிர பணியில் மக்கள். கண்ணிவெடியில் தூளாக்கப்பட்ட பாலங்கள் மீண்டும் புரட்டப்பட்டுக் கொண்டிருந்தன. கல்லுக் கும்பிக்கருகில் காலூன்றிப் பார்த்துக் கொண்டிருந்த தபாற்காரனை ஊரார் சூழ்ந்தனர்.

"ஒருத்தருக்கும் தபால் இல்லை. வேலையைப் பாருங்கோ. இண்டைக்குக் கணபதிக்கு மட்டும் தான் கடிதம்"

என்றபடி மீண்டும் சயிக்கிள் பெடலை உந்தி முன்னேறினார் தபாற்காரன். மீண்டும் வேலைக்குத் திரும்பினர் மக்கள். "எப்பிடிக் கிடந்த ரோட்டுகள்..... மனிசனுக்குப் புத்திவர கனகாலம் எடுக்குது. சரி இப்பவாவது புத்தி வந்ததே...." என்றபடி பெடலை அழுக்கினார் செல்வத்துரை அண்ணர்.

படிப்பகம்

www.padippakam.com



"அங்க பார்..... அது முத்தையா வாத்தியார் தானே?...." கால்கள் நிதானமாக நடந்தன. கால்தட்டாமல் நேரே போய்க்கொண்டிருந்தார் முத்தையா வாத்தியார்.

"எங்க பள்ளிக்கூடமே......" என்றபடி தபால்காரர் கதை கொடுத்தார்.

"ஓமோம். பொடியள் பழையபடி பள்ளிக்கூடம் வருகினம். இனிக் குடிக்கவும் ஏலாது" என்றபடி வாத்தியார் நடந்தார். வாத்தியாரின் நடையோடு செல்வத்துரை அண்ணரும் சமமாக நடந்து கொண்டிருந்தார். பேச்சுத்துணை கிடைத்த திருப்தியில் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தார்.

"வாத்தியார் ஒப்பந்தம் நெடுங்காலம் வாழுமோ, அல்லாட்டில் ஜே. ஆரை பழையபடி கண்டிக்கு யாத்திரை போவாரோ....." என்று அரசியலில் இறங்கினார் தபால்காரன்.

"ஒப்பந்தம் எப்பிடியோ வந்திட்டுது. இது எங்களுக்கும் அவங்களுக்கும் நல்ல பாடம். இனி ஆக வேண்டியது ஜே. ஆர் குறைந்தது பத்து வருசமாவது உயிரோட இருக்க வேணும். செத்தானோ போச்சுது. கெட்டவங்களும் எமக்குச் சிலவேளை நல்லவங்களாகிவிடுகின்றனர் இல்லையா?" என்றார் முத்தையா வாத்தியார்.

"அது மட்டுமில்லை. இரண்டு பேருக்கு நல்லவனாக இருக்க ஏலாது என்ற தத்துவத்தையும் ஜே. ஆர் காட்டியிருக்கிறார். பாவப்பட்ட மனுசன் எங்களுக்க சரிஞ்சு சிங்களவருக்கை எல்லாம் விழுந்து போய்க் கிடக்குது. இதுதான் அரசியல்" என்றார் தபால்காரன்.

"இதுதான் நான் அரசியலுக்க கால் வைக்கேல்லை. கால் வைச்ச ஆக்களுக்கெல்லாம் தலைபோச்சுது கண்டியளே." என்றார் முத்தையா வாத்தியார்.

"என்னதான் இருந்தாலும் அமிர்தலிங்கத்துக்கும் ஒரு இடம் கொடுக்க வேணும்" என்றார் தபால்காரன்

"ஏன் மீண்டும் யுத்தம் தொடங்கிறது. உமக்கு விருப்பம் போல......" என்றபடி...... "என்ன ஒரு கடிதம் தானே

www.padippakam.com


வந்தது?" என்று கதையை மாற்றினார் மெத்தையா வாத்தியார்.

"ஓமோம்... ஒரே ஒரு கடிதம் தான்."

"யாருக்கு"

"கனவதிக்கு"

"எந்தக் கனவதிக்கு"

"பள்ளக் கனவதிக்கு"

"என்ன தவால்?"

"கச்சேரியால."

"அதாற்ற முத்திரை"... என்று கைக்குள் புகுந்து பார்த்தார் வாத்தியார்.

"அது சிவகுமாரன்ர நினைவு முத்திரை" என்றபடி இருவரும் நடந்தனர்

பள்ளிக்கூடம் வந்துவிடவே மீண்டும் செல்லத்துரை அண்ணன் சைக்கிளில் ஏறினார்.

"ஞாயிற்றுக்கிழமை கோவலன் கூத்து - நீங்களும் வாங்கோ" என்றபடி செல்லம்மாக்கா வீதியில் நின்றா.

"என்ன.... கனகாலத்துக்குப் பிறகு விடுவனே?" என்றார் தபாற்காரர்.

"ஒரு கடிதம் தான். அது கனவதிக்கு" என்று முந்திக்கொண்டார் தபாற்காரன்.

"கனவதிக்கு உறவுச்சனமார் போடுறது?"

"கச்சேரியால வருகுது" என்றார் தபாற்காரன்

"அப்பிடி என்ன கடிதம்?" இது செல்லம்மா.

"அதேன் உனக்கு" இது தபாற்காரன்.

"உடைச்சுப்பாத்திட்டியளோ?"

"நானே?"

"காணிக்கச்சேரி ஏதுமோ?"

"இல்ல பொலிசு வேலைக்கு".

செல்லம்மா நின்று கதைக்காத ஆள். இண்டைக்கு என்ன? ஓ!

தோடு, சங்கிலி போட்டிருக்கிறள். அதுதான். "வாங்கால (BANK) எடுத்தாச்சோ?"

ஐஞ்சு வருசம். இப்பத்தான் எடுத்தனான்.

படிப்பகம்

www.padippakam.com



"எங்கால பயணம்?" இது தபால்காரன்.

"மணியத்தின்ர அந்திரட்டியாம். அதுதான்."

"களவெடுப்பானோன் போல நீங்க தொங்கிறானேன். மணியம் பெண்டில் எப்படி இருக்கிறாள்?" - இது தபால்காரர்.

"பாவம். கள்ளனெண்டாலும் கணவன் தானே... ஏதோ கச்சேரியால தையல் மிஷின் இருந்தவங்களாக்கும். தைச்சுப் பிழைக்கிறாள்' என்றாள் செல்லம்மா.

மீண்டும் கணவதியின் கடிதத்துடன் முன்னேறினார் செல்லத்துரையண்ணர்.

செல்லம்மாவின் குரல் இடைமறித்தது.

சுதந்திரபுரத்தின் செய்திக் களஞ்சியமே இந்தச் செல்லம்மாதான். தலையை உதறிக் கொண்டை போட்டுக் கொண்டு வந்தாளே ஏதோ ஒரு சுவாரசியமான செய்தி வரப்போகுது என்று தெரியும் தபால்காரருக்கு.

"உவள் மாம்பழம்."

ஓ!

இந்தியாவில இருந்து வந்த ஆமிக்காரன் ஒருத்தனோட தொடர்பெண்டே. இப்ப பிள்ளை பிறந்திருக்கு. அவன் வாறது போறதில்லையாம். தெரியுமே?"

"சண்டைக்கு வந்தவங்களோ அவ்வாட்டி.... என்று விளங்கிக் கொண்டார் தபால்காரர்.

"இந்தியாவில பஞ்சம் தீரயில்லை. அதில கொஞ்சம் இஞ்ச. என்றபடி "வெளியில கதைக்காதை என்றபடி செல்லம்மாவிடமிருந்து பிரிந்தார்.

**பிழை திருத்தம்**

குமிலோசை— கூவல் 8 இல் வெளியான திரு. பாலமனோகரனுடனான பேட்டியில் (37ம் பக்கம்), "எனது 3 வது நாவலுக்கு வீரகேசரியின் தலைசிறந்த எழுத்தாளர் என அறிமுகம் செய்து இருந்தனர்" என்ற வசனத்தில், வீரகேசரியின் தலைசிறந்த எழுத்தாளர் என்பதற்குப் பதிலாக ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் எனத் திருத்திக் கொள்க. தவறுக்கு மன்னிக்க.

படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரபுரம் சந்திக்கு வந்துவிட்டார் தபால்காரர். சைக்கிளைவிட்டிறங்கினார். இரண்டு நிமிடம் கை கட்டி, தலை குனிந்து மௌனமாக நின்றுவிட்டு நிமிர்ந்தார். கையில் கணபதியின் கடிதம்.

இப்போதெல்லாம் சுதந்திரபுரத்துக்கு வரும் போது இந்தச் சந்தியிலுள்ள சிலையடியில் மௌன அஞ்சலி தெரிவிப்பது தபால்காரனின் வழக்கம். யுத்த காலத்தில் சுதந்திரபுரத்திலுள்ள இருபது இளைஞர்களைப் பிடித்துக் கை கால்களைக் கட்டிவிட்டு சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்ற நிலையிலும் அதன் பின்னே இளைஞர்கள் துப்பாக்கியோடு நிமிர்வது போன்ற காட்சியும் கொண்ட அந்தச் சிலையடியில் இருந்து மீண்டும் ஒரு பெருமூச்சோடு சைக்கிளைத் தள்ளினார் தபால்காரர்.

கணபதி வீட்டுக்குச் செல்ல இன்னும் இரண்டு மைல்கள் இருந்தன. சந்தியில பொடியள். இனியும் ஏன் நிக்குதுகள். வயலில இறங்கவேண்டியது தானே.... சண்டை பிறகு கதை. பிறகு சண்டை. வேறும் தான்". "என்ன செல்வத்துரையண்ண புறுபுறுத்துக் கொண்டு போறியள்" என்றபடி சைக்கிளில் சமாந்தரமாக வந்து கதை தொடுத்தார் வைத்திலிங்கம்.

"இல்ல... நம்ம இளசுகளைப் பற்றித்தான் யோசிச்சன் - அங்க பாருங்கோ சந்தியில... இதுகள் ஊருக்குப் புதுசு போலயும் கிடக்கு...."

"புதிசில்லை. பழைய ஆக்கள் தான். சண்டைக்கு வெளிக்கிட்டு வெளிநாடு போனதுகள். இப்ப திரும்ப வந்து நிக்கினம். தலையளைப் பாத்தியளே. ஒருத்தன் தோடு குத்தியிருக்கிறான். தகப்பன்ர பரவணி போல" என்று சிரித்தார் வைத்திலிங்கம்.

"நாகரீகம் சுற்றிச் சுழன்று திரும்பின இடத்துக்கே வருகுது பாருங்கோ எதுவும் ஒரு வட்டம் தானே?

"நீங்கள் உதைச் சொல்லுறியள். சப்பாத்துக் கழட்டுறாங்களில்லை. கால் கூசுதாம். வெய்யில் தாங்க ஏலாதாம். அந்தந்த நாட்டோட ஒட்டியிருந்தவங்களுக்கு இப்ப நம்ம நாடு ஒத்து வருகுதில்லை. எல்லாம் போகப் போகச் சரிவரும் தானே.

படிப்பகம்

வைத்திலிங்கத்தாரின் சைக்கிள் ஓட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் செல்லத்துரையண்ணன் கதையை மாற்றி வைத்திலிங்கத்தை ஆறுதலாக்கினார்.

"கணவதிக்கெல்லே கடிதம் வந்திருக்கு."

"ப.... கணவதிக்குத் தானே.. அவனுக்கென்ன கடிதம். நேற்றுக் கணவதியின்ர வீடும் எரிஞ்சு போச்சுதாம். நீங்கள் கேள்விப்படயில்லையே..."

"என்ன ?" என்றபடி ஆவலோடு கேட்டார் தபாற்காரர்.

இந்த வீடு தானே, ஏதோ எரிஞ்சுபோச்சுதாம். அவனும் என்ன செய்யிறது. ஒண்டுக்கு ஒரு ஆம்பிள்ளைப் பிள்ளையளைப் பெத்தும் கடசியில அவனுக்கு அதுதே கதியாய்ப் போச்சு...." என்று பரிந்தார் வைத்திலிங்கம்.

"அவங்கள் ஒரு ஆம்பிளையளும் இருந்திருந்தால் அவன்ர நிலைமை இண்டைக்குக் கஞ்சிக்கும் வழியில்லாமல். பாவம் அவன்ர சாதியும் துரத்துது. காசும் துரத்துது."— தபாற்காரர் கலங்கியே விட்டார்.

இதற்குள் வைத்திலிங்கமும் தபாற்காரரும் பிரியும் கட்டம் வந்துவிட்டது. பாதை இரண்டானது. ஒன்று காட்டுக்கு. ஒன்று தோட்டங்களை நோக்கி. காட்டை நோக்கியிருக்கும் பாதையில் சைக்கிளை விட்டார் தபாற்காரர். ஓட முடியாது என்ற நிலையில் இறங்கி உருட்டத் தொடங்கினார். காட்டுப்பாதையில் இன்னும் ஒரு மைல் தூரம் போக வேண்டும். ஒற்றையடிப் பாதை. அந்தப்பாதை நேரே கணவதி வீட்டுக்குத் தான். வேட்டைக்காரர்கள் அவ்வப்போது வருவதைத் தவிர மீதம் கணவதியின் குடும்பத்தின் கால்கள் ஏற்படுத்திக் கொண்ட பாதை.

நேரே! அதோ எரிந்து நாசகப்பட்ட நிலையில் குடிசை. பக்கத்தில் ஒரு வேப்பமரம். சுற்றுப் புறத்தில் பனைகளின் கூட்டம். ஆடு ஒன்று குட்டிக்குப் பால் கொடுத்த நிலையில் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தது. "கணவதி!" ஓங்கிக் குரல் கொடுத்தார் தபாற்காரர்.

www.padippakam.com



"என்ன கயிறு திரிக்கிறாய். தபால் ஒண்டு வந்திருக்கு"

என்ன என்பது போல அலட்சியமாகப் பார்த்தான் கணபதி.

'விலாசத்தைச் சரியாய்ப் பார்த்தியளோ... எனக்கென்ன படிக்கத் தெரியும். படிச்சுச் சொல்லுங்கோ ஐயா'

சுவாரசியமற்ற பதில்தானெனினும் தனக்குத் தபால் வந்ததென்ற அதிர்ச்சியும் முகத்தில் சற்றுத் தெரிந்தது.

தபால்காரர் தபாலை வாசித்தார்.

கச்சேரியால் வந்திருக்கு.

"நீங்களும் உங்கள் குடும்பமும் இந்த நாட்டின் சுதந்திரத்துக்குச் செய்த தியாகங்களை அரசு கௌரவிக்கிறது. தியாகிகள் பரம்பரை என்ற கோதாவில் உங்கள் குடும்பம் சேர்க்கப்பட்டுள்ளது. தியாகிகள் கௌரவிப்பு விழாவிற்கு வந்து கலந்து கொண்டு தங்களுக்குரிய வாழ்வூதியப் பணத்திற்கான வங்கிப் புத்தகத்தைப் பெற்றுச் செல்லவும். சுதந்திரம் உங்களைக் கௌரவிக்கிறது."

இங்ஙனம்
அரச அதிபர்.

வேலியில் காயப் போடப்பட்டிருந்த மஞ்சள் வேட்டியைப் பார்த்தார். ஓட்டை இல்லாத இடமேயில்லை. அவனது வாழ்க்கையைப் போல. வெள்ளையாகத் தான் வேட்டி வாங்கப்பட்டது. வெள்ளை இடம் மாறி விட்டது. நிறம் மாறிய வாழ்க்கை. முதுமை கிழித்த காயங்களை விட முட்கள் கிழித்த காயங்களே மனதுக்குள் கடலலையாய் ஓசையிடுகின்றன.

"ஐயா. ஒரு பிள்ளையளையும் பலிகொடுத்தனான் - காசுக்கா? க, ப, ந எண்டு கோடியிக்க வைச்சிருந்ததுகள் தான் துவக்கோட நிண்டதுகள்ள அதிகம். இதிலையும் எங்கட சாதியளை ஏமாத்திப் போட்டாங்கள்..

சரி! சுதந்திரம் தான் கிடைச்சிட்டுது. வாழ்த்துவம். வாழ்வம். நிர்வாணமாய் மேடையில் சரிக்குச் சரியாய் நிண்டு பரிசு வாங்கிறது பரிசு கேடு."

படிப்பகம்

www.padippakam.com



பள்ளிக்கூடத்து வாசலையே அறியாத கணபதி கேட்டான்
"இறைவனோ யாரையுங்கோ... சொன்னதுகள் ஒரு பேப்பரில எழுதித்தாங்கோ ஐயா."

செல்வத்துரையண்ணன் கண்களின் விளிம்பு கட்டி நின்றது நீர்த்துளி.

பதில்க் கடிதம் எழுதப்பட்டுக் கொண்டிருந்தது.

கணபதி கயிறு திரித்துக் கொண்டிருந்தான்.

இவன் வைரமான கயிறுகள் திரிப்பானாம் என்று ஊரிலுள்ளோர் பேச்சு.

இனியொரு தபால் கணபதிக்கில்லை.

விழிநீர் துடைக்கும்
விடியல் பொழுதைக்
காணத் துடிக்கும்
புதுமைப் பெண்ணின்
புலம்பல் இது.

# ஒப்பாரிக் கோட்டம்
# ஒப்பாரியும்

பவாணி
NORGE

ருஷியாவோ கருங்காலி
இந்தியாவோ நாகதாளி
ஈழமோ இப்போது காலி.
உதைக்கப்பட்டதோ பல தாலி
இந்தியா போடுவது சில வேலி
இது எமக்கு இடப்படும் ஒரு தாழி.
நாங்களோ இந்தியாவின் கூலி
இது புரட்சிக்கே ஒரு கேலி.
மக்களோ அடி கொண்ட ஆழி - அவர்
அறிந்து கொள்வர் இந்தப் போலி.
புரட்சியின் தன்மை உனது பாட்டாளி.
புறப்படு நீ ஒரு காளி.
விடியலுக்காய் கூவுது கோழி
விழித்தெழுந்து விடு இனித் தோழி

www.padippakam.com




அரசியல்வாதியல்ல நான்!
போராளியே.

என் எல்லாத் தலைவர்களும்
என்னை
அயல் வீட்டில் வளர்த்தார்கள்.
அதனால் வந்த தவறு
என் ஆயுதங்கள்
என்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன.

இப்போ
முடிமட்டும் மாறுகிறது.
அடி எதுவும் மாறவில்லை.
அது எனக்குக் கசக்கிறது.
அதனால்
இன்று மட்டும் தூங்கப் போகிறேன்.

நீதி தேவதையின் கண்களை
கறுத்தத் துண்டால் கட்டிவிட்டு
கறுத்தக் கோட்டுகள் நீதிமன்றத்தில்
மீண்டும் விளையாடப் போகின்றன.
நிரபராதிகள் தண்டிக்கப்படலாம்.
நீதிமன்றத்தில் தொலைத்த நீதியை
S.A. சந்திரசேகரின் படங்களைப் பார்த்து
மக்கள் மன அமைதி பெறலாம்

மீண்டும்,
செம்பு தண்ணிகள் பார்க்கப்படலாம்
செல்லாக் காசுகள் புது நோட்டுகளாகலாம்.
கைக்குள் பொத்தித் தான்
காரியங்கள் கவனிக்கப்படலாம்.

www.padippakam.com



தலைவர்கள் மேடையில் கேக் வெட்டவும்.
தலையாட்டித் தொண்டர்கள் கை தட்டவும்
தமிழர் தலைவிதிகள் மீண்டும் ஒத்திப் போடப்படலாம்;
தலைவிகள் தேசிய கீதம் இசைக்கலாம்.

தவறணைகளின் திறப்பு விழாவிற்கு
தலைவரிடம் நான் கேட்டு ஒரு கியூ வாசலில் நிற்கும்.
தலைவிக்காக சிறை சென்ற மகனைப் பார்க்க
பொர்சுக் கடிதம் கேட்டு இன்னோர் தாய்
ஓர் ஓரத்தில் நிற்பாள்.

இந்திய மலிவுப் பதிப்புக்களிலும்
இரண்டாம் காட்சி சினிமாக்களிலும்
மக்களின் கவனங்கள் திருப்பப்படலாம்
எதிர்ப்பவர்களை நக்சலைட்டுக்கள் என இந்தியன் ஆமியே
கைது செய்யலாம்.

இது எல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை.
இதனால்!
இன்று மட்டும் தூங்கப் போகிறேன்.

ஆனால்.
நான் விழிக்கும் போது
மக்களும் விழிப்பார்கள்.
அதுவரை நான் ........

பிரவி

படிப்பகம்

www.padippakam.com



# அன்பான குயிலுக்கு




1. மீராவின் வரிச்சு மட்டை கதை படித்தேன். வசனங்களாலே உணர்ச்சிகளை சிறுகதை மேலாகவும் அள்ளித் தெளிக்க முடியும் என்பதற்கு மீராவின் கதை நல்ல உதாரணம். மீராவிடம் இருந்து இனிமேலும் இப்படிக் கதைகளை எதிர்பார்க்கிறேன்.

இவ்வண்ணம்
முல்லையூரான் என்ற சிவராசா. மு.
(ஒரு வாசகன்)

2. மீராவின் வரிச்சுமட்டை வேலிகள் சிறுகதையின் ஆழம் நெஞ்சைத் தொட்டது, கூட்டத்தினரிடையே இருந்து வந்த ஒரு நிதர்சன உண்மையைக் கூறும் குரல் மட்டும் நெஞ்சை நெருடியது. விரக்தியின் விளிம்பிலிருந்து ஆற்றாமையை அக்குரல் வெளிக்கொணர்ந்திருக்குமானால் ...... காலாகாலமாக மறையாது சந்தர்ப்பங்களில் மட்டும் விசுவரூபம் எடுக்கும் கல்யாண இனத்தை (நன்றிகெட்ட தனம்) அது வெளிக்கொணர்ந்தது மனவருத்தத்துக்குரியது. நிதர்சன உண்மையை நின்றுபார்க்க முதுகெலும்பில்லாத எங்களுக்கு விமர்சிக்க உரிமை இல்லையே.

பாஸ்கரன், HILLEROD.

3. யாழ் மண்ணின் இறுக்கத்தைக் காட்ட ஒரு வேலியக்கா; பொருளாதாரப் பிரச்சனையின் நெருக்கத்தைக் காட்ட குழந்தை நிலா; வோட்டுப் போட்டுவிட்டும், இயக்கங்களுக்கு காசு கொடுத்துவிட்டும் தம் பங்களிப்பை முடித்து விட்ட இனம் விழித்துக் கொள்வதை காட்ட சனக்கூட்டத்திடையே இருந்து ஓர் குரல்; இம் மூன்று பாரிய பொறுப்பையும் ஒரு சிறுகதையில் வரிந்த மீராவை கூவல் ஊஞ்சலின் காதல் கதை எழுதத் தெரியாதா என கேலியாகக் கேட்டதை நினைத்து வெட்கப்படுகிறேன்.





சுமதி. FYN.

படிப்பகம்

www.padippakam.com







திரு. சிவாவின் சித்திரத்துக்கான கவிதையை மிகவும் நன்றாக எழுதியிருந்த மாயவன் வைலே அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்

S.K.V. வேல் HALS

அரைவாசிக் கதைவரை பெயர்கள் உலாவுகின்றன என்ற நினைப்பே தோன்றாதபடி ஒரு மர்மக்கதை போல் கதையை நடத்திச் சென்ற K.S. துரையின் உத்தி பாராட்டத் தக்கது - கரை TARM.





அடிக்குறிப்புக்களுடன் அமைந்த பவித்திராவின் பொட்டு ஆய்வுக்கட்டுரை நன்று.

சோமசேகரன். ALBOG.

வாசகர்களை வயிறு குலுங்கவும், சிந்திக்கவும் வைத்த குற்றவாளிக் கூண்டில் குயிலோசை மிகப் பிரமாதம் - ரமேஷ். SLAGELSG








சென்ற மடலில் உனது படைப்புகள் அத்தனையும் மிகவும் சிறப்பானவை. எங்களது மனப்பூர்வமான பாராட்டுக்கள் என்றும் உனக்கே.

USHA GRACE, FARUM.

www.padippakam.com



# திருவள்ளுவர் சொல்கிறார்: 3

Politican பத்திரிகையில் இலங்கைத் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற செய்தி வெளிவந்த அன்று பல டென்மார்க் வாழ் இலங்கைத் தமிழர் இதயங்களில் ஏதோ ஒரு சோகம் குடிகொண்டிருந்ததைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. ஈழத் தமிழர்களுக்கு என்ன சுதந்திரம் கிடைத்தது என்று பார்க்கக் கூட நேரமில்லாமல் நமது சுக சுதந்திரம் பறிபோய்விட்டதே என்ற ஒரு ஏக்கத்தை அவர்களிடையே பார்க்கக் கூடியதாக இருந்தது. சில மனங்களில் பூபாளம் இசைத்ததையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த நிலையில் "இலங்கைக்குத் திரும்புறதோ?" என்ற கேள்வியை ஆளா ஆள் கேட்டுக் கொண்டனர். "அனுப்பினால் திரும்புறது தான். இருக்கும் மட்டும் காசைச் சேர்த்து ஒரு வழிப்பண்ணிவிட்டால் அங்க போய் என்ன செய்யிறது" என்ற ஒரு பொதுக் கோட்பாட்டில் எல்லோருமே அடங்கி விட்டனர்.

படிப்பகம்

இந்த நிலையில் திருவண்ணா என்ன சொல்லுகிறார் எனக் கேட்க வேண்டும் போல இருந்தது. தொலைபேசியைச் சுழற்றினேன்.

"Det er Thiru", என்ற குரல் வரவேற்க. கேள்வியைத் தூக்கிப் போட்டேன். "என்ன திருவண்ணா இலங்கைக்குத் திரும்பிறதோ" என,

"என்னெண்டு..... இலங்கைக்கு திரும்பிறதோ?...... திரும்பினாலும் திரும்பிட வேணும். இஞ்ச பாருங்கோ. அலாதுப்பட்டுத் திரியேலாது. ஊருக்குப் போய் முற்றத்துக்கிடத்தில முகம் கழுவி..... மாவுக்குக் கீழ மணலில இருந்து ஒரு போத்தல் கள்ளும், ஒரு மீன்ரசமும் அடிச்சு... ஐக்கற்றில்லாமல், சுவற்றறில்லாமல் ஆசுவாசமாய் தென்னங்காத்துக் குடிச்சு.... அப்பிடி இருக்கால் தோட்டத்தையும் சுத்திப் பார்த்து..... நினைக்க எவ்வளவு சந்தோஷமாய்க் கிடக்கு..... விளங்குதோ..... நல்லாய்த் தான் இருக்கும். சொர்க்கமான விஷயம் தான்.

இதைல் ஒன்டு பாருங்கோ -...... பூனைக்குட்டிதான் கையைக் கடிக்கும் (திருவண்ணா பணத்தைப் பூனைக்குட்டி என்று தான் சொல்லுவார்). சரி - என்ன தனியே போகப் போகுது. வெட்டியாடலாம். கஞ்சி குடிச்சிட்டுக் கிடந்தாலும்....... ரெட்டில விரல் காட்ட மாட்டாங்கள் பாருங்கோ -

ஊத்தைச் சீலை என்டாலும் அம்மா மடிதான் பெரிசு........ திரும்பிறது நல்ல விசயம் தான். ஆனால் திரும்பிறத்துக்கும் மனமில்லாமலும் கிடக்குது பாருங்கோ. அதுதான் ஏன் என்டு தெரியேல்லை"

எத்தனையோ மனங்களில் ஒழிந்து கொண்டு, வெளி வெருத்துக்காக திரும்பிறது என்னெண்டு போலி வேஷம் போடாமல் உண்மையை அப்படியே சொத்தெறியும் திருவண்ணா, "உண்மையில பாதிங்கோ மனுசன் தான்".

# ஊத்தை சீலை என்டாலும் அம்மாமடி பெரிசு

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# டென்மார்க் அவதியுறும் அகதிகள் சங்கம் - DTRS

## முதலாவது பேரிடிப் பரீட்சை'8

நேரம் : 2 hr. புள்ளிகள் : 100

இதில் பலவினத் தேர்தல் வினாக்கள் எட்டும் (8x5=40) அமைப்புக் கட்டுரை வினா இரண்டும் (2x15=30) கட்டுரை வினா இரண்டும் (2x16=30) உண்டு. இதன் பதில்களை உங்கள் நண்பர்களுடனோ அன்றி குடும்பங்களுடனோ ஆலோசித்து உங்களுக்கு நீங்களே புள்ளிகள் போட்டுக் கொள்ளுங்கள்.

① 75 புள்ளிகளுக்கு மேல் எடுப்பவர்கள் நாட்டுக்குச் சென்றாலும் புத்திசாலித்தனமாக வாழ்வீர்கள்.

② 50 - 75 க்கும் இடையில் எடுப்பவர்கள் நாட்டில் புத்திசாலித்தனமாக நடக்கிறோம் என நினைத்து எதுவும் செய்ய முயலவேண்டாம். பணத்தை வங்கியில் இட்டு வட்டியில் வாழ்வதே மேல்.

③ 50 - 30 க்கும் இடையில் பெறுபவர்கள் நாட்டிற்குச் சென்று வெள்ளை வேட்டி சால்வையுடன் பிரச்சாரம் செய்யும் கட்சியில் தொண்டர்களாகச் சேரலாம்.

④. 35 க்கு குறைந்த புள்ளி பெறுபவர்கள் இந்த நாட்டை விட்டுப் புறப்பட யோசிக்க வேண்டாம்.

படிப்பகம்

www.padippakam.com



# பலவினாத்தேர்வு வினாக்கள்

1. டென்மார்க்கில் இருந்து எடுத்துச் செல்லக் கூடியது.

1. ஆப்பமாக்கள் உடுப்புகள்.
2. AIDS
3. D.F.H. கொடுத்த பாத்திரங்கள்.
4. அங்கு கரடி விட சில கறுத்திர சேட்டிங்கள்

2. நாட்டுக்குச் சென்றாலும் அழிக்க முடியாதன.

1. நாட்டை விட்டு ஓடியவர்கள் என்ற பெயர்
2. இங்கு குற்றிய காதோட்டைகள்
3. அடிக்கடி தோன்றும் டென்மார்க் பற்றிய எண்ணங்கள், பேச்சுக்கள்.
4. POLITI யில் கொடுத்த தகவல்கள்.

3. இங்கிருந்து செல்ல விரும்பாத காரணம்.

1. இந்த நாடு கொடுக்கும் சொகுசும் சொம்பேறித்தனமும்.
2. பொருளாதாரம்.
3. இங்கு வந்தபின் ஊரில் உதறிய உறவுகளைப் போய்ச் சந்திக்கத் தயக்கம்.
4. நாட்டை விட்டு ஓடிவந்த குற்ற உணர்வு.

4. இங்கு செய்து, அங்கு செய்ய முடியாதது.

1. புகையிரதங்களிலும் பஸ்களிலும் முடிந்த CARD காட்டிப் பிரயாணம் செய்தல்.

படிப்பகம்

www.padippakam.com



2. வகுப்பறைகளில் சிகரட் புகைத்துக் கொண்டு ஆசிரியருக்கு முன் இருந்து பதிலளித்தல்.

3. 29ம் திகதி கிடைக்கும் உழைப்பில்லாத சம்பளம்.

4. SAMMEN MED.

5 நாட்டுக்குச் சென்றவுடன் செய்யக் கூடியது.

1. டென்மார்க்கில் எம்மவர் செய்த சில சாதனைகளை அண்டை அயலவர்களுக்குக் கூறல்.

2. இலங்கை அரசியலைப் பற்றிச் சாப்பிட்டது சமிபாடடைய இருந்து விவாதித்தல்.

3. HONDA, YAMAHA முதலியன வாங்கி வருதல்.

4. தொடர்ந்தும் Toilet Paper பாவித்தல்.

6. இலங்கையில் கிடைத்து இங்கு கிடையாதன.

1. இலங்கையின் காலநிலை.

2. Reol களையும் sofa களையும் எல்லைப்படுத்தப்படாத சில உண்மையான உறவுகள்.

3. காலைக் கள்ளும் மதியக் கூழும்.

4. காசுக் கடன் கழிக்கும் வசதிகள்.

7. டென்மார்க்கில் என்ன படித்தீர்கள் என அங்குள்ளோர் கேட்கும் போது கூறக்கூடியன.

1. டெனிஷ் பாஷை.

2. எஞ்சினியர் என்றன்ஸ் எக்சாம்.

3. ICMA, Charted Account First Part Pass.


4. Cooking exam Pass. (Spe. Pizza)

8. தமிழர் சுதந்திரத்துக்கு டென்மார்க்கில் செய்த பங்களிப்பு.

1. உண்ணாவிரதங்களில் பங்கு கொண்டது
2. மாதா மாதம் 50Kr. கொடுத்தது.
3. இலங்கை அரசியலைப்பற்றி விவாதித்து மற்றவர்களைக் குழப்பாது அமைதியாக இருந்தமை.
4. இலங்கையைப் பற்றிப் பெரிய கனிருகள் திரித்தமை.

1. 

# அமைப்புகட்டுரைவிளக்கள்




A = KBH விமான நிலையத்தில் வந்திறங்கி central camp இல் Form Filling முடியும் வரையிலான காலம்.

B = Accept பண்ணும் வரையிலான காலகட்டம்

C = Accept பண்ணப்பட்டு D.F.H இல் இருந்த காலம்.

D = ஆகஸ்ட் 25, 26 ம் திகதி.

E = ஆகஸ்ட் 25, 26 ம் திகதியிலிருந்து இன்று வரை.

www.padippakam.com



1. C பகுதியில் இதய அடிப்புச் சற்றுக் கீழ் இறங்கி இருப்பினும் ஏன் சாதாரண இதய அடிப்பு மட்டத்துக்கு வரவில்லை?

..............................................................................

2. ஓர் அகதிக்கு A ஐ விட B யில் வரைபு கீழே வர மிகச் சாத்தியக் கூறு உண்டு. ஆனால் ஏறக்குறைய அதே மட்டத்தில் காணப்படுவது ஏன்?

..............................................................................

3 a. D யின் திடீர் அதிகரிப்புக்குக் காரணம் என்ன?

..............................................................................

b. அதிகரிப்பைக் குறைப்பதற்கான வழி முறைகள்?

..............................................................................

4. E யில் தொடர்ந்தும் அதேயளவு இருப்பது ஏன்?

..............................................................................

5. சாதாரண மட்டத்துக்கு இதய அடிப்பைக் கொண்டு வரச் சாத்தியமான வழி முறைகள் யாவை?

..............................................................................

உ. A = காம்புகள் B = D. F. H காலகட்டம், C = கொடுமைகள்

1. A B C என்ற காலகட்டங்களில் எப்பகுதியில் தமிழர்கள் அனேகர் ஒற்றுமையாக இருந்தனர்?

..............................................................................

2. எக் காலகட்டத்தில் அனேக தமிழர்கள் ஒருவருக்கொருவர் பிரச்சனைப்பட்டுக் கொண்டார்கள்? ஏன்?

..............................................................................

3. எக் காலகட்டத்தில் தமிழர்கள் ஒருவருக்கொருவர் பிரச்சனைப் படவில்லை? ஏன்?

..............................................................................

படிப்பகம்

www.padippakam.com



4. எக்காலகட்டத்தில் ஒருவருக்கொருவர் போட்டி மனப்பான்மையுடன் வாழ்ந்தனர்?

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

5. எ.க்குகள் அதிகமாக மக்களைத் தாக்கிய கால கட்டங்கள் எவை?

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

6. சில நாட்களாக C யில் உள்ளவர்கள் மேல் A, B யினருக்கு பொறாமை அதிகமாகியுள்ளது என அறியப்படுகிறது. ஏன்?

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

7. A யில் B யும், C யும் கோபப்பட்டுக் கொண்ட சந்தர்ப்பங்கள் எவை?

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

8. A B C மூன்றும் ஒன்றாகச் செயற்பட்ட நிகழ்ச்சி யாது?

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

9. A B C மூன்றிலுள்ளவர்களும் ஒன்றாக கவர்ந்த தமிழ்ச் சஞ்சிகை யாது?

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

10. A B C மூன்றிலுள்ளவர்களிடம் சேர்ந்து எதிர்த்த ஓர் தமிழ்ச் சஞ்சிகை?

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

## கட்டுரை வினாக்கள்

III

1. இலங்கை அகதிகாரம் இலங்கையின் எச்சரிக்காரம்" என்ற தலைப்பில் பின்வருவனவற்றை ஆராய்க. 1. வெள்ளைக்கொலர் உத்தியோகங்கள், 2 சாதிப்பிரச்சனைகள். 3 சீதனக் கொடுமைகள்.

2. இலங்கையில் இருந்து இனி எக்காரணங்களைக் கூறி வெளிநாடுகளில் தஞ்சம் கேட்கலாம்; அன்றி எக் காரணங்களைக் கூறி இலங்கைக்குச் செல்லாது தப்பலாம் என ஆராய்க.

படிப்பகம்

www.padippakam.com



பவித்ரா

# சாதி அமைப்புகள்

அண்மையில் HOHE என்னும் இடத்தில் ஓர் கண்காட்சி நடைபெற்றது. அங்கு "தமிழர்களின் கலாச்சாரம்" என்னும் தலைப்பின் கீழ் தமிழர்களின் சாதியமைப்பு முறைகளும், சீதன முறைகளும் சகல விபரங்களுடன் எழுதப்பட்டு இருந்தது. வெட்கத்துக்குரியதும், வேதனைக்குரியதுமான இவ்விடயம் எமக்குத் தற்போது கிடைத்துள்ள சுதந்திர மயிலும்(?) தொடர்ந்து இருக்கப்போகும் பிரச்சனைகளே. இதனால் இச் சிறப்புமலரில் இதுபற்றி அலசுகிறேன். இவ்விடயங்களும் ஆழமாகவும் அகலமாகவும் எழுதப்படவேண்டியவை எனினும் இவ்வோசையின் பக்கங்களைக் கருத்தில் கொண்டு சாதி அமைப்புக்கள் பற்றி மேலெழுந்தவாரியாக இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

★

தமிழர் சமுதாயத்தின் இந்தச் சாதி அமைப்பானது எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதும் அதனால் ஏற்பட்ட சமூகச் சீரழிவுகள் பற்றியும் நாம் சிந்திப்பது அவசியமாகும்.

நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் கூட்டம் நிலையாக ஓரிடத்தில் இருக்கத் தலைப்பட்ட போது தோன்றிய வேளாண்மைச் சமுதாயத்தில் உருவானது தான் நிலவுடமை அமைப்பாகும். நாடோடிகளாக வாழ்ந்த போது அவர்களிடம் வேற்றுமைகளோ பாகுபாடுகளோ இருக்கவில்லை. அச்சமுதாயம் ஒரு பொதுவுடமைச் சமுதாயமாக இருந்தது. ஆனால் வேளாண்மைச் சமுதாயம் தோன்றி சிறிது காலத்தில் மனிதன் தனக்கு என்று நிலங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளத் தலைப்பட்டான். இத்தகைய சமுதாயத்தில் நிலவுடமைக் குழுக்கள் உருவாகின. இந்த நிலவுடமைக் குழுக்களுக்கு ஓர் தலைவன் உருவானான். அவனே படிப்படியாக மன்னன் அரசன் என்ற நிலையை அடைந்தான்.

தன் நிர்வாகத்தைப் பரவலாக்கும் முயற்சியில் இவ்வரசன் ஈடுபட்ட பொழுது தன்னோடு

www.padippakam.com



இறைந்த நிலையில் இருந்தவர்களும். சாதாரண மக்களைவிட வளமை கூடியவர்களுமான நிலப்பிரபுக்களைத் தன் பிரதிநிதிகளாகக் கொண்டு ஆட்சி நடத்தினான். இங்கு தான் முதன் முதலில் பொருளாதார ஏற்றத் தாழ்வு வலுப் பெற்று விரிவடைந்தது. மன்னன்; அவனுக்குக் கீழ் நிலப்பிரபுக்கள்; அவர்களுக்குக் கீழ் சாதாரண மக்கள் என சமுதாயம் கூறுபோடப்பட்டது. கூறுபோடப்பட்ட சமுதாயத்தில் அதிகாரத்திலிருந்த வர்க்கம் தனக்குக் கீழே இருந்தவர்களை அடக்கியும், சுரண்டியும் வாழத் தலைப்பட்டது. நிலப்பிரபுக்களுக்குக் கீழ் இருந்த மக்கள் அவரவர் தொழில் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டனர். சமூகம் சீராக இயங்க இந்த அமைப்புத் தேவை எனக் கூறப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் தொழிலடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட இந்த அமைப்பானது ஏற்கனவே உருவான பொருளாதார ஏற்றத் தாழ்வுகளினால் சாதிப்பாகுபாடாக மாறியது.

வேளாண்மை செய்தவன் வேளாளன் என்றும் அவனுக்குக் கூலி வேலை செய்த பண்ணை அடிமைகள் பள்ளர் என்றும் அழைக்கப்பட்டனர். பண்ணையில் உழைப்பவர்கள் பள்ளராகவும் அவர்தம் உழைப்பில் வாழ்பவர்கள் நிலச்சொந்தக்காரர்களாகவும் இருந்தனர். இதனால் உழைக்காமலே சுரண்டி வாழும் ஓர் வர்க்கம் (நிலவுடைமையாளர்கள்) தன்னை நிலைநிறுத்திக் கொள்ள சாதிப்பாகுபாட்டை மேலும் வளர்த்தது. மேலும், சமூகத்தின் ஏனைய தேவைகளை நிறைவேற்ற வேலைகளை செய்தவர்கள் தச்சர், கொல்லர், கம்மாளர், அம்பட்டர், வண்ணார்... என பலவாறாகினர். இவ்வாறு அநேக சாதிகள் தொழிலடிப்படையில் உருவாகின. இவையே பின் பரம்பரையாக வந்து பிறப்படிப்படையில் சாதிகளாகின.

இம்மக்களின் பொருளாதாரம் மிக மிக தாழ்ந்த நிலையிலேயே இருந்தது. இவர்களிடம் வரிகள் அறவிட்டும், தமக்கு சேவகம் செய்வித்தும் வந்த சுரண்டும் வர்க்கம் இவர்களை முன்னேற விடவில்லை. கூடவே அதிகாரத்தில் இருந்தமையால் இம்மக்களை அவர்கள் அடக்கியும் வைத்திருந்தனர். இதனால் இம் மக்கள் அவர்களைக் கண்டு பயந்து, பணிந்து நடந்தனர்; இத்தன்மை அம்மக்களிடையே ஓர் தாழ்வு மனப்பான்மையைக் கொண்டுவர அவர்களும் தாங்களாகவே ஒதுங்கி வாழத் தலைப்பட்டனர். கூடவே அன்னியமாப்படுத்தப்பட்டனர். இது மேலும் சாதிப் பாகுபாடு வளரக் காரணமானது.

மேலும், சாதிப்பாகுபாட்டை நிலைநிறுத்த முயன்ற சுரண்டும் வர்க்கம் மதத்தை தனக்கு ஓர் கருவியாகப் பயன்படுத்தியது. அரசன் கடவுளின் பிரதிநிதி என்ற எண்ணம் தோன்றும்படியாக நடந்தது; அரசன் அரண்மனையும் 'கோவில்'

படிப்பகம்

www.padippakam.com

எனவே அழைக்கப்பட்டது. கோவிலில் பூசை செய்பவர்கள் உயர்சாதியினர் ஆவர்கள். கட்டப்பட்ட கோவில்கள் சாதி அமைப்புக்களுக்கு ஏற்பவே கட்டப்பட்டன (உ+ம். கருவறையில் அந்தணர், அதற்கடுத்து வேளாளர் அரசர், கொடிமரத்தடிக்கு அன்னார், அதற்கு வெளியே பறையர்) என கலாநிதி மௌனகுரு அவர்கள் குறிப்பிட்டுள்ளார் — படைக்கப்பட்ட இலக்கியங்கள் மறைமுகமாக சாதியை வரவேற்றன. உதாரணமாக பெரியபுராணத்தை எடுத்துக் கொண்டால் அது பல சாதிகளிற் உள்ள சிவனடியார்களைப்பற்றிய வரலாறாகும். அவர்கள் அனைவரும் ஆண்டவன் முன் சமன் என பெரியபுராணம் கூறுகின்றது. ஆனால் இதனை சமூகவியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்த ஆய்வாளர்கள் இது திட்டமிட்ட சாதிப்பிரச்சாரமாகும் எனக் கூறுகின்றனர். இங்கு கூறப்படும் முத்தியானது சாதிப்பாகுபாடுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது. சுந்தரர் பிராமணர் என்பதனால் அவர் வெள்ளையானையில் கைலாயம் சென்று இறைவனில் முத்தியடைகிறார். நந்தனார் பறையர் எனப்படுவதனால் அவர் தீக்குளித்தே சிதம்பரம் சென்று முத்தியடைகிறார். கண்ணப்பநாயனார் வேடர்; இவர் கண்ணைப் பறிகொடுத்தே முத்தி அடைகிறார். இவ்வாறாக நிலவுடைமை வர்க்கம் மதத்தை கருவியாக்கி சாதிப்பாகுபாட்டை மறைப்பது போல மறைத்துப் பேணியது. பெரிய புராணம் பாடிய சேக்கிழார் சோழ அரசனின் அமைச்சர் என்பது இங்கு மனங்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இது பாடப்பட்ட காலம் நிலவுடைமையாட்சியின் பொற்காலமான 12ம் நூற்றாண்டாகும்.

ஐரோப்பியர் வருகையினால் கிறிஸ்தவமதம் பரவ சாதிப்பாகுபாடு சிறிது மறையத் தொடங்கியது எனினும் மீண்டும் அது நிலைநிறுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவமதம் இதனை வலியுறுத்தவில்லை எனினும் கிறிஸ்தவரிடையேயும் சாதிப்பாகுபாடு உள்ளதை இன்றும் நாம் காணமுடிகின்றது. மன்னராட்சி முடிவடைந்து ஜனநாயக ஆட்சி வந்தபின் நிலப்பிரபுக்கள் இருந்த இடத்தில் உடையார்கள் பிடித்துக் கொண்டனர். அவர்தம் பரம்பரை தொடர்ந்தது. கூடவே ஜனநாயகம் என்ற பெயரில் வந்த முதலாளித்துவத்தில் சுரண்டும் வர்க்கம், பாட்டாளிவர்க்கம், மத்தியதர வர்க்கம் என பல வர்க்க வேறுபாடுகள் உள்ளன. இவற்றுடன் கலந்துவிட்ட நிலையில் தான் இன்றைய சாதியமைப்பு உள்ளது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இன்றும் உள்ள காரணத்தினால்தான் / மேற்கூறப்பட்ட பாகுபாடுகள் மறையாமலே உள்ளன. இதனால் தான் கிறிஸ்தவரிடையேயும் சரி இந்துக்களிடையும் சரி சாதிப்பாகுபாடுகள் மலிந்துள்ளன.

இதனால் ஏற்பட்ட விளைவுகள் பாரதூரமானவை. நாட்டின் உற்பத்தித்துறையில் ஈடுபட்ட பெரும்பான்மையான மக்களின் (கீழ்சாதியார்) அறிவு வளர்ச்சி துண்டிக்கப்பட்டு இருந்தது. உற்பத்தித் துறையும் அறிவுத்துறையும் வேறு வேறு துருவங்களாக இயங்கியமையால் நாட்டின் பொருளாதாரத்தில் மாற்றங்களைக் காண முடியாது என திரு. கேசவன் அவர்கள் கூறியிருப்பது இங்கும் குறிப்பிடத்தக்கது. கீழ் சாதி மக்களின் சிந்தனைகள் அவர்தம் தொழிலுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது.
(25ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# தகவல் தருகின்றோம்



எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு

- குறள் -

குயில் 8.
25-7-87




கடந்த குயிலில் மேற்கண்ட தலையங்கத்தில் எமது ஆசிரியுரை அமைந்திருந்தது. டென்மார்க் டெனிஷ் - தமிழ் தோழமை ஒன்றியத்தினரும், திரு. பாலமனோகரன் அவர்களும் எமக்கு இது சார்பான தமது கருத்துக்களைத் தெரிவித்து அதைக் குயிலோசையில் பிரசுரிக்குமாறு கேட்டதற்கிணங்க இதில் அத் தகவல்களைத் தருகிறோம்.

தகவல்கள் பரவலாக டென்மார்க் வாசகர்களைச் சென்றடையும் ஓர் ஊடகமாகவே குயிலோசை இதில் தன் பங்களிப்பைச் செய்கின்றது. தவிர எந்த ஒரு அமைப்புக்குள்ளும் குயிலோசை அடங்கவில்லை எனத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடும் எமக்கு மிக அதிகம்.

இதுவரை குயிலோசை எந்த அமைப்புக்குள்ளும் அடங்காது எவ்வாறு நன்மை தீமைகளைச் சுட்டிக் காட்டியதோ அவ்வாறே தொடர்ந்தும் இயங்கும்.

www.padippakam.com



Dansk-Tamilsk Venskabsforening
c/o T Selvakumar
Porsvænget 38, 3 th.
7400 Herning

# டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம்



பத்திரிகை ஆசிரியர்
P.O BOX 334
4000 ROSKILDE
DENMARK

ஆசிரியர் அவர்கட்கு,

25.7.87 இல் வெளிவந்த ஈழலோசைப் பத்திரிகையில் "தேவை" என்னும் தலையங்கத்தில் எழுதிய கருத்துரையை வாசித்தோம். இதில் தமிழர்களுக்கு ஒரு அமைப்பு தேவை என்றும் எழுதியிருந்தீர்கள். ஆனால் 1986ம் ஆண்டு ஆனிமாதம் 12ம் திகதியிலிருந்து இந்த நாட்டின் சட்டதிட்டத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்ட டெனிஸ் - தமிழ் தோழமை ஒன்றியம் என்ற பெயரில் ஒரு சங்கம் இயங்கி வருகிறது. இதில், 110 அங்கத்தவர்கள் உள்ளனர். இதில் டெனிஸ் மக்களும் அடங்குவர். நாம் இச் சங்கத்தைப் பற்றிய விபரமும் ஒவ்வொரு டெனிஸ் அகதிகள் சங்கங்களுக்கும் அனுப்பியிருந்தோம். எம்மவர் இச் சங்கத்தில் சேர்வதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை.

சங்கத்தின் சார்பாக எமது சங்க விபரங்களைத் தங்களுக்கு இத்துடன் அனுப்பி வைக்கிறோம். இச் சங்கம் ஒரு அரசியல் சார்பற்றது. எமது இந் நிலையை டென்மார்க் வாழ் தமிழ் மக்களுக்கு உங்கள் பத்திரிகை மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். தங்களுக்கு மேலதிக விபரம் தேவைப்படின் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ந. கணேசகுமார்
உப தலைவர்.

## தகவல்: I

www.padippakam.com



# தகவல்: II

## கடற்கன்னி சற்றுக் காத்திருக்கட்டும்!

எமது நெஞ்சங்களில் ஏறியிருந்த சுமைகள் இறங்கிய நிலையில் பிறந்த மண்ணில் விட்டுவந்த சொந்தங்களும் பந்தங்களும் இப்போது நின்மதியாக மூச்சுவிட முடிகிறது என்பதை உணர்கையில் உண்டாகும் சந்தோஷம் எம் உள்ளங்களில் நிறைந்திருக்கும் இந்த நேரத்தில் -

சமாதானம் கனிவதற்குக் காரணமாயிருந்த அனைவருக்கும் நாம் மனமார நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்தச் சமாதானத்தை வென்றெடுக்கத் தம் உயிர்களை அர்ப்பணித்த தியாகிகளுக்கு வணக்கம் நிறைந்த அஞ்சலிகளை அளிக்கின்றோம்.

எப்போது நாடு செல்வோம். நம்மவரைக் காண்போம் என்று நாம் துடிக்கும் அதே வேளையில் நமது நாட்டுக்கும் நமது மக்களுக்கும் தருவதற்காக நாம் எதனைக் கொண்டு செல்லப் போகிறோம் என்ற கேள்வியும் எம் உள்ளங்களில் எழுகின்றதல்லவா?

ஆக்கபூர்வமான பல பணிகள் அங்கு எமக்காகக் காத்திருக்கின்றன. சிதைந்தவற்றைச் சீர்திருத்தவும் அழிந்தவற்றைக் கட்டி எழுப்பவும் தேவையேற்பட்டிருக்கின்றது.

இந்த ஆக்கபூர்வமான பணிகளில் நமக்கு அங்கு என்ன பங்கு உண்டு? அந்தப் பங்கை ஆற்றும் வகையில் நம்மை நாம் எந்த அளவுக்கு ஆயத்தம் செய்துள்ளோம்?

அகதிகள் தமது சொந்த விருப்பத்தைப் பொறுத்தே நாடு திரும்புவதையிட்டுத் தீர்மானிக்கலாம் என டென்மார்க் அகதிகள் நலன்புரிச் சங்கம் மூலம் தெரிய வருகிறது. இதையொட்டி நம்மவரில் பலர் நாடு திரும்ப விரும்பினாலும் சிலரின் மனங்களில் சிக்கல்கள் இழையோடவே செய்கின்றன.

எமது மண்ணுக்கும் மக்களுக்கும் உதவும் வகையில் நாம்

படிப்பகம்

www.padippakam.com



இங்கு எதனைப் புதிதாகக் கற்றுக் கொண்டோம். நாம் இங்கு வாழ்ந்த இந்தக் குறுகிய காலத்தில் அப்படி எதைத்தான் சிறப்பாகக் கற்க முடிந்தது?

சொந்த மண்ணில் தொழில் வாய்ப்புக்களும், வசதிகளும், சுயமாகவே தொழில் செய்யும் திறமையும் கொண்டவர்களிற் பிரச்சினையில்லை. ஆனால் அந்த வசதிவாய்ப்புக்கள் இல்லாதவர்கள் அங்கு போய் எம்மவர்க்கு மேலும் பாரமாக இருக்க முடியுமா?

நிரந்தரமாகவே இங்கு தரித்துவிடுவது இந்தச் சிலரின் நோக்கமாக இல்லாவிடினும் தாய் மண்ணுக்குத் திரும்புவதற்குச் சிறப்பான தகுதிகளை இங்கு பெறும் வகையில் இங்கு தங்க நினைப்பது தவறாகாது.

தேனீக்கும் கறையானுக்கும் இன்றும் ஒவ்வொரு ஜீவனுக்கும் பிறப்பிலேயே கிடைத்திருக்கும் திறமைகள் போல் ஒவ்வொரு மனிதரிடத்தும் ஏதோ ஒர் திறமை உண்டு என்பது உண்மை. அவரவர்க்குக் கிடைக்கும் அனுபவங்களையும் சந்தர்ப்பங்களையும் பொறுத்து அந்தத் திறமை பலரில் மலர்ந்து அவர்க்கும் பிறர்க்கும் பயனளிக்கின்றது. சிலரில் அது செயல்படாது மறைந்திருக்கின்றது.

ஆகவே நமக்கிருக்கும் விசேட திறமை என்ன? அதை எந்த வகையில் இந்த நாட்டில் சிறப்பாக வளர்க்க முடியும் என்பதை நாம் ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

இந்த நாட்டின் தொழிற்கல்வியும் ஏனையவையும் முன்னேற்றமடைந்தவை. மேலும் எந்த வயதுவரையும் கல்வி பயில வாய்ப்பும் உண்டு.

உதாரணமாகக் கட்டிடக்கலை, தளபாட உற்பத்தி, பண்ணைத் தொழில், மீன்பிடித்தல், கம்பியூட்டர் கலை போன்ற துறைகளில் இங்கு நம்மவர் பெறும் பயிற்சியும் அனுபவமும் எமது தாய் மண்ணிற்கு மிகவும் பயன்படக்கூடியவை ஆகும்.

தாய் நாட்டுக்குத் திரும்புபவர்கள் தமது டெனிஸ் நண்பர்களுடன் உள்ள தொடர்பை மேலும் பேணுவதுடன் உல்லாசப் பயணிகளாக அவர்களை அங்கு அழைத்து எமது சொந்த

படிப்பகம்

www.padippakam.com



பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடலாம் அல்லவா?

எனவேதான் இந்த முக்கியமான கால கட்டத்தில் நாம் சற்று நிதானித்து, சிந்தித்து எமது எதிர்காலத்துக்கான திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

முடிவு எப்படிப்பட்டதாக இருந்தபோதும், இங்கு தரிக்க விரும்புபவர்களுக்கும் ஆங்கு செல்ல விரும்புபவர்கட்கும் அவரது நலன்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய எம்மவர்க்கென ஒரு தனியான அமைப்பை உருவாக்கும் அவசியமும் அவசரமும் ஏற்பட்டுள்ளது.

இந்நாட்டில் வாழும் வேறு பல இனக்குழுக்களுக்கு இப்படியான சங்கங்கள் உண்டு. டனிஸ் - தமிழ் நட்புறவுச் சங்கம் ஒன்று இப்போ இயங்கி வருவது மிகவும் வரவேற்கக் கூடியது எனினும் இலங்கைத் தமிழருக்கென ஒரு தனியான அமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.

திமிலி தன் கடந்த மடலில் இந்த எண்ணத்தை எமது மனங்களில் ஏற்கெனவே விதைத்துள்ளது. அந்த நல் விதை வெகு சீக்கிரம் முளைவிடவும், வளர்ந்து விசாலித்துப் பயனளிக்கவும் நாம் எதைச் செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? கருத்துக்களும், அறிவுரைகளும் ஆக்க பூர்வமான பங்களிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

இங்ஙனம்,
அ. பாலமனோகரன்
BIRKHOJTERRASSERNE 413A.
3520. FARUM.

ஒருவர்: DUTY FREE SHOP க்கிப் போறதென்றிட்டு ஏன் இந்தப் பக்கம் போறீர்?

மற்றவர்: பின்ன சூப்பமாக்கற் எந்தப் பக்கம் இருக்கு?

(FRA: DIANALUND)

படிப்பகம்

www.padippakam.com


# மீராவின் தொடர்கவிதை

உன்னை ARTSக்கு விட்டனை. ஒரு வருஷம் பிந்தினாலும் பரவாயில்லை. நீ திரும்பவும் எட்டாம் வகுப்பிலை படி.

மகன் இப்ப Advance level முடிச்சிட்டு LONDON EXAM ஒண்டுக்காக படிக்கிறா. அதுதான் நான் வீட்டுவேலை ஏதும் செய்விக்கிறதில்லை...

வாத்தியார்! உவனை உரிச்சு என்டாலும் S.S.C பாஸ் பண்ணை வையுங்கோ.

தரகர்! டொக்டர் என்டதால் எப்பிடியும் 5 லக்கு குறையாமல் வேண்டலாம் தானே.

கைவேலை படிக்கிறனாம் கைவேலை. பிறகு இதைப் படிச்சு நீ என்னடா தச்சு வேலையே செய்யப் போறாய்.

## கருத்துகளும் காலஓட்டமும்...

சீதையிடம் தோற்றது
சரஸ்வதியைப் பழிவாங்கிவிட்டது
நடந்ததும் இலங்கையில் தான்.

இங்கே புடம் போடப்பட்டவர்களை விட
பொசுக்கப்பட்டவர்களே அதிகம்.

இறந்து போன நிலவுடைமையின் ஆவியொன்று
பள்ளிக்கூட வாசல்களில் நின்று
பற்றிக் கொள்ள ஆரம்பித்தது.

உடையார்கள் இருந்த இடத்தில்
Sir ஐ வும் மடம் ஐ வும் நின்று
ஆட்சி செலுத்தத் தலைப்பட்டன.

விஞ்ஞானப்பிரிவு கலைப்பிரிவை
சாதிப் பிரதிஷ்டை செய்தது.

படிப்பகம்

கூடவே,
பாராளுமன்ற பதியுதீன்களினதும்
பறக்கத் துடித்த பெற்றோரின் ஆசைகளும்
கிளித்தட்டு மறிக்கப் புறப்பட்டதால்
காய்க்க பழுமானவர்கள் மாணவர்களே.

பள்ளிக்கூட வேலிகளுக்குக் 'கதியால் வெட்டு'
என்பதே இல்லை.
காரணம் மாணவமணிகளின் முதுகு அறியும்
அதற்கு
கைத்தாளமிட்ட பெற்றோரின் மனது அறியும்.
எதற்காக இதெல்லாம்?
இலட்சணம் இல்லாத எல்லாத்தையும்
இலட்சங்களுக்கு விற்பதற்காகவே.

நடந்தது என்ன?
தப்பித்தன இரண்டொன்று.

அரங்கேற்றத்துக்கு நாள் குறித்துவிட்டு
காலில் சலங்கையைக் கட்டிக் கொண்டன.
கையில் வயலினை எடுத்துக் கொண்டன.

அட்வான்ஸ் லெவலில் அடி சறுக்கியவை எல்லாம்
ஆளுக்கொரு பையுடன் ICMA செய்யப் புறப்பட்டதால்
பைகளுக்கே தட்டுப்பாடு வந்தது என்னவோ பூபாலசிங்கம் புக் டிப்போவுக்குத் தான்)
இதை எட்டாம் வகுப்பு N.P.T.A யிலேயே தீர்மானித்திருக்கலாம்.


முடிவு.......

தொலைவை உயர்த்தப் புறப்பட்டுக்
கழுத்தையே வெட்டிக் கொண்டோம்.
மற்றவைகளை மிதிக்க உயர்த்திய கால்களெல்லாம்
மீண்டும் மண்ணை மிதிக்க முடியாத நிலைக்குத்
தள்ளப்பட்டு விட்டன.

(பகுதி I முற்றிற்று)

(தொடரும்)

www.padippakam.com

ப. தேவியின்

# தமிழ்டையைத் தேட....!

சென்ற இதழ் தொடர்ச்சி:

கன்சனுக்கு பேதியும் கசாயமும் என்னும் சிங்கள மருந்தும் கொடுக்கப்பட்டது. இதற்கிடையில் இவர் ஒரு நாள் வெளியில் உலாவவந்த போது கட்டுப்பொத்தச் சந்தியில் காடையர்கள் இவருடைய கைக்கடிகாரத்தைப் பறித்துவிட்டார்கள்.

இவர் இருந்த அகதிமுகாமில் மலசலகூடம் இல்லை. தென்னைமரத்துக்குப் பின்னாலேயே மலம் கழிக்க வேண்டும். அப்போது இவரைப் பூரான் கடித்துவிட்டது. இதனால் ஒருவாரம் நாட்டு வைத்தியம் பெற்றார்.

கன்சனுக்கு S தகுதி அசேவம் கிடைத்துவிட்டது. அவருடன் இருந்த ஆபிரிக்க இனத்தவர் ஒருவருக்கு நிராகரிப்புக் கடிதம் வந்திருந்தது. அவர் தமிழர்களுக்கு ஆதரவாகக் கதைத்தமையே அதற்குக் காரணமாகும். இனி அவர் மேல் முறையீடு செய்து அதிஉத்தம ஜனாதிபதியின் தலைமையின் கீழ் இயங்கும் குழுவிடம் அனுமதி பெறவேண்டும். இக் குழுவில் J.R, லலித், காமினி சிறில் மத்யூ ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

அசேவம் கிடைத்தவுடன் கன்சனை ஒரு பத்திரத்தில் கையெழுத்துப் போடும்படி கேட்டுக் கொண்டனர்.

கன்சன்: இதில் என்ன எழுதியிருக்கின்றது.

அ.ச.உ: தமிழ் ஈழத்தை ஆதரிக்கமாட்டேன் என்றும் தமிழர்களை வெறுப்பேன் என்றும் எழுதியுள்ளது.

படிப்பகம்

க: இல்லை தமிழர்க்கு இருக்க முடியாது. தமிழ் ஈழத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது என் சொந்த அபிப்பிராயம் அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது.

அ.ச. அப்படியானால் நீங்கள் தேடிவந்த தர்மிஷ்டனைக் கண்டுபிடிக்க முடியாது.

க: இல்லை. எனது அரிக்கன் லாம்பில் எண்ணெய் உள்ள வரை நான் தர்மிஷ்டனைத் தேடியே தீருவேன்.

அ.ச. நீங்கள் தமிழர்களுக்கு ஆதரவு என்றால் உங்கள் லாம்பிற்கு எண்ணெய் கிடையாது.

க: நான் எண்ணெய்யைக் கடைகளில் பெற்றுக்கொள்வேன்.

அ.ச இல்லை. அதை நீங்கள் ஆமிக்காம்பிலேயே பெறவேண்டும் அதற்கு நீங்கள் இந்தக் கையெழுத்துப் போட்ட FORM ஐக் காட்ட வேண்டும்.

க: எண்ணெய்க்கும் தர்மிஷ்டனுக்கும் என்ன சம்பந்தம்

(கன்சனுக்குத் தலைசுற்றுவது போல் இருந்தது.)

அ.ச. இது எங்கள் தர்மிஷ்டனின் பொருளாதாரக் கொள்கை. தர்மிஷ்டனைத் தேடுவதே கன்சனது நோக்கம். அதற்கு எண்ணெய் தேவை. ஆகவே FORM இல் கையெழுத்திட்டார்.

கன்சனுக்கு அசேலம் கிடைத்த பின்பு அவர் சிங்கள மொழி கற்க ஒரு வகுப்பில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கடனில் இருப்பதற்கும், குடி நீருக்கும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டது. சிங்கள வீடொன்றில் அவருக்கு ஓர் அறை வழங்கப்பட்டது. சிங்கள மொழி படிக்க முன்பு சிங்கள சரித்திரமும் கலாச்சாரமும் அவருக்குப் போதிக்கப்பட்டது.

கன்சன்: நான் இலங்கையில் சிங்களம் தமிழ் என இரு மொழிகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். தமிழையும் கற்க விரும்புகிறேன்.

www.padippakam.com


இதற்கிடையில் விரக்தியடைந்த கன்சன் தனக்கு இலங்கையில் அசைலம் வேண்டாம் என்றும் தனது டெனிஸ் பாஸ்போட்டைத் திருப்பித் தரும்படியும் கேட்டார். அவரது பாஸ்போட் மந்திரி ஹோவரின் மருமக -னுக்காக தவறி மாற்றப்பட்டுவிட்டது எனவும் கன்சன் அறிந்தார்.

கைக்கடிகாரம், உடுப்புக்கள், பியர், அரிக்கன் லாம்பு, WALKMAN, இறுதியாக பாஸ்போட் இவையெல்லாவற்றையும் இழந்த நிலையில் எமது கன்சன் அதாவது டெனிஸ் அகதி உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் இலங்கையிலுள்ள டெனிஸ் தூதரகத்தில் தன்னை எப்படியாவது டென்மார்க்கிற்குத் திருப்பி அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்.

தர்மினியைத் தேடுவதிலும் பார்க்க ALLERØD இல் இறுதியாக இருப்பதே மேலென எண்ணிக் கொண்டார்.

(முற்றும்)

# மானிடத்தின் மணிவிளக்கே.....

மண்காக்கப் புறப்பட்டு மண்ணுக்குள் மண்ணான
மானிடத்தின் விளக்குகளே!
உங்களைப்போல் புறப்பட்டு உடனிருந்த கருவறுத்து
ஊரையழித்து; உடல்வளர்த்து; உளம் வளர்த்து - பின்னர்
தம் பெற்றோர் பெருங்குற்றம் தன்மை வளர்த்தும் தணியாமல்
தாமிங்கு டென்மார்க் தப்பிவந்து --- ஆகாகா
இன்றுயர் தமைவீரர் என்றுரைத்து எம்மவர்கள்
இனப்பெருமை குலப்பெருமை எல்லாமே அழித்தின்று
இவர் புரியும் இழிசெயலை எவர்க்குரைப்பேன் -- எவர்க்குரைப்பேன்.

நாட்டில் இவர் புரிந்த நாசங்கள் அறியாத
நல்லவர்கள் இவரையிவர் நாவாலே இதம் பேசி
இச்சகமாய் உடனழைத்து இல்லிருந்தே இடிபறிக்கும்
பச்சைத் துரோகமதைப் பார்க்கமனம் கொதிக்குதையோ!
பெட்டிப் பாம்பாயிவ் வீணரை அடக்குதற்கு
மண்காக்கப் புறப்பட்டு மண்ணுக்குள் மண்ணான
மானிடத்தின் மணிவிளக்கே மறுபடியும் வாராயோ!


R. S. ஹரன்
ஒல்போக்.

படிப்பகம்

www.padippakam.com



# பேனாக்கள் பேசுகின்றன




1. மனோகரன் NYKOBING

மீரா. நீங்கள் ஊருக்குப் போவது என்ன மாதிரி?

MY DEAR மனோகரா.

நான் ஊருக்குப் போவதென்றால் நீர் கூட வரத்தான் போறீரா? அன்றி இல்லை நான் போகவில்லை என்றால் நீர் போகாமல் விடத்தான் போறீரா. என் பதிலைப் பார்க்காமல் SOCIAL ADVISER ஐச் சந்தியும்.

2. வைசயாநாதன் நிரஞ்சன் Esbjerg

கல்லுக்குள் தேரையை வைத்து அந்தத் தேரைக்கும் உயிரை வைத்த கண்ணன் தன் காதலன் என்பதால் மீரா என்பதைத் தன் புனை பெயராகக் கொண்ட ஜீவகுமாரன் தானே சாதித்தல் என்னும் கவிதையில் மாயவன் என மாறியுள்ளார்? நானும் எனது நண்பரும் இது காரணமாக 100 kr பந்தயம் பிடித்துள்ளோம். இருவரும் வேறு என நண்பர் கூறுகிறார். இருவரே என நான் கூறுகிறேன். உங்கள் பதில் எனக்கு 100 kr ஐ வரவழைக்குமா ஐயா? (பந்தயம் பிடிக்குமளவுக்கு வாக்குவாதப்பட்டவர் மார்க்கண்டு அகிலன் Esbjerg)

இல்லை மகனே.... 100kr ஐக் கோட்டைவிட்டாய். மாயவன் இலங்கை கட்டுப்பொத்தை வளாக மாணவன். தற்போது 7 மாதத்தில் F.A.S EXAM PASS பண்ணிய ஒரே ஒரு வெளிநாட்டவர் என்ற பெருமையைத் தட்டிக் கொண்டவர்.

படிப்பகம்

www.padippakam.com



3. திருமதி துரைசிங்கம். HUNDSLUND.

சவால் 8 இல் 'மண்டையை உடைத்துக் கொள்ளுங்கள் என்ற புதிர் விடையில் எல்லா ஊர்களுக்கும் தார் ஊற்றிவிட்டு யாழ்ப்பாணத்துக்கு மட்டும் ஊற்றாது விட்டது ஏன்?

எப்பவும் கிண்டிப் பார்ப்பதிலும் கிளறிப்பார்ப்பதிலும் முதலிடம் நம்ம பசார்தான் (ஹி... ஹி... நானும் யாழ்ப்பாணம் தான்) ஆகவே தான் எல்லா இடத்துக்கும் ஊற்றிவிட்டு யாழ்ப்பாணத்துக்குத் தார் ஊற்றவில்லை.

4. சிவராஜா - நாகர்கோவில்

கேள்வி, நான் டென்மார்க்கிற்கு வந்து இன்றுடன் கிட்டத்தட்ட ஒருவருட காலமாகிவிட்டது. இன்னமும் எனக்கு மற்றவர்களைப் போல் உழைக்க வேண்டும் என்ற ஆசை துளியுமில்லை. ஆசை உண்டாவதற்கு ஏதும் மருந்து மாத்திரை இருந்தால் கூறுவீரா?

காசு எதுவும் தராமல் கழுத்தைப் பிடித்து டென்மார்க் அனுப்பப் போகிறது என நினையும். கை தானாக செயிக்கும்.

5 வெள்ளி துறைக்காய் S. யோகன். HELSINGOR

இந்திய சமாதானப்படையின் இராணுவம் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டுள்ளது தாங்கள் அறிந்ததே. அவர்களுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக, மற்றும் தனியார் சகோதரிகள் வெகு அன்னியோன்னியமாம். ரொபி, பிஸ்கட், சிகரட் வாங்கிக் கொடுக்கும் அளவுக்கு உறவு வளர்த்துள்ளது. நல்லூர் கந்தன் வீதிவலம் வரும் போது இதைக் காணக் கூடியதாக இருந்ததாக எம் சகோதரர்கள் மனத்தாங்கற் படுகின்றனர். இச் சகோதரிகளைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

எம் சகோதரர்களும் ஹவாமி மாத்தையா என முன்னரும் பின்னரும் ஒருக்கால் திரிந்ததையும் அவர்கட்கு நடந்ததையும் எம் சகோதரிகள் மறந்து விட்டார்கள் போலும் தெரிகிறது..... இக மிஞ்சினால் புதுவரவு செலவுத் திட்டத்தில் அனாதைக் குழந்தைகளுக்கு என நிதி ஒதுக்கப்படலாம்.

படிப்பகம்

www.padippakam.com


6 ஜனனி . FARUM.

(i) 'கைதவறிக் கிடைத்த காதல் கடிதத்தில் இருந்து...' என ஒரு சிறிய துணுக்கு வெளியிட்டிருந்தாயே. மற்றவர்களின் கடிதம் படிப்பது தவறு எனத் தெரியாதா?

அதைவிட காதல் கடிதங்களைத் தொகுப்பதும், காதல் கதைகள் கண்டபடி அவிய விடுவதும் மகா தப்பு

(ii) தங்கள் முன்னேற்றத்துக்குப் பின்னால் நிற்பவர் யார்?

என் பின் பிடரியில் உள்ள மூளை.

7. தர்மகுலசிங்கம் . HUNDIGE.

எவ்வளவு காசு தந்தால் நீர் டென்மார்க்கை விட்டுப் போவீர்?

"காசுக்காக நாமிங்கு வரவில்லை. எமக்கு எத்தனையோ வசதிகள் அங்கு இருக்கிறது. ஆமிப்பிரச்சனையாலேயல்லவா இங்கை வந்தனாங்கள்" என எம்மைச் சுற்றியுள்ள டெனிஸ் மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும். மேலாக தமிழ் விழா மேடைகளிலும் நின்று கூறிப்போட்டு...... எப்பிடி ஐயா இதற்குப் பதில் கூறுவது.

8. இரவீந்திரன் . NYKOBING

I இலங்கையிலும் குயிலோசை கூடுமா?

பத்திரிகைச் சுதந்திரம் இருந்தால்......

II தமிழ் தமிழ் என்று என்னத்தைச் சாதித்தோம்?

அகதிக் காசு கிடைக்கேல்லை......?


படிப்பகம்

www.padippakam.com



உபகதை:

கூறியவர்: மஜனி




ஒரு பாடசாலை. 3ம் வகுப்புக்கும் 2ம் வகுப்புக்கும் இப்போ (F)ப்றீப்பாடம் (Free). ஓய்வு நேரப் பாடம் என்றால் சின்னப்பள்ளி மாணவர்களுக்கு இது சுவம் தானே. அன்றும் வழக்கம் போல களேபரம் ஆரம்பித்து விட்டது வகுப்பில். Free தானே.

வாங்கு மூலையில் செல்லம்மா வீட்டு மாங்காய் சிதறியது. ஆளுக்கொரு துண்டு. 3ம் வகுப்பில் அதிகமான மாணவர்கள் என்பதனால் அளவில் குறைந்த 2ம் வகுப்பு மாணவர்கள் அவர்களுக்குப் பயம். அதிலும் பாப்பின் சீலையின் பொடியன் கிண்டி விடுவதிலும் கூத்துப் பார்ப்பதிலும் வின்னன். அவனுக்குக் கிண்டன் என்றுதான் பட்டப் பெயர் சூட்டப்பட்டு இருந்தது.

இந்தப் Free பாடத்துக்கும் வழமை போல் கிண்டனின் தூண்டுதலால் சண்டை ஆரம்பித்து விட்டது. ஆளை ஆள் அடித்து, கட்டிப் பிடித்து இழுத்து நடந்து கொண்டிருந்த சண்டை சண்டியன் புலேந்திரன் வெஞ்சியால் இறுதியதோடு ஸ்தம்பித்தது.

"கண்ணுக்குள்ளை எல்லோ குத்திப் போட்டான். வாடா வாத்தியாரிட்டப் போய்ச் சொல்லுவம்" என்ற அழைப்புகளுக்கிணங்கி குத்துவாங்கினவனும் கண்ணில் இரத்தம் சொரிய கூட்டத்துடன் அழுக்கைக் கீழ் பிரம்போடு மாணவ வட்டத்தின் நின்ற உபவாத்தியார் இந்திரசேனனிடம் சென்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



கண்ணில் இரத்தத் தோடு நின்றவனைக் கண்டதும் இந்திரசேனனுக்கு பிரம்புபிடித்த கை முறுக்கெடுத்தது. இதற்குள் 2ம் வகுப்பினர் முறையிட்டதைக் கண்ட 3ம் வகுப்பினர் ஒப்பாரி வாத்தியாரிடம் ஆர் முதலில் இத்தினது என்ற விளக்கமும் சரணடைதலும் தன்பாட்டில் நடந்து கொண்டிருந்தன.

வாத்தியார் இந்திரசேனன் உரத்த குரலில் சொன்னார். "3ம் வகுப்பும் 2ம் வகுப்பும் 1ம் வகுப்புக் காரரோட ஆலமரத்துக்குக் கீழ வாங்கோ. எல்லோருக்கும் நான் பாடம் எடுக்கிறேன்".

இரண்டாம் மூன்றாம் வகுப்பு மாணவர்கள் ஆலமரத்தை நோக்கி வரிசையாகினர். இந்திரசேனன் வாத்தியார் பிரம்போடு பின்னால் நடந்தார். மாணவர்களுக்கு அப்படி நடக்கும் என முன்பே தெரிந்திருந்தால் அடிபட்டிருக்க மாட்டார்களோ? Free பாடம் தானே நல்ல Free யாகவே இருந்திருக்கும். அப்புறம் என்ன? இந்தி(ய)ரசேனன் வாத்தியார் தனது கை வரிசையைக் காட்டத் தொடங்கினார். •—•

## Accord Adjunct



1. இலங்கை இந்திய ஒப்பந்தம் கொழும்பு இஸ்லாமாபாத் இராணுவ வர்த்தக உறவின் முறிவுக்குக் காரணமாகியுள்ளது.

2. இலங்கையில் இருந்த பாக்கிஸ்தான் இராணுவ ஆலோசகர்கள் இப்போ திருப்பியனுப்பப்பட்டுக் கொண்டுள்ளனர்.

3. எதிர்காலத்தில் இலங்கைத் துருப்புக்கள் இந்தியாவில் பயிற்றப்படுவார்கள்.

4. நான்கு மாதங்களுக்கு முன் பாக்கிஸ்தானிடம் கேட்டிருந்தும் விநியோகிக்கப்படாத கண்ணீர்ப் புகையும், றபர்குண்டுகளையும் இந்திய ஒப்பந்தத்தின் பின் 24 மணி நேரத்தில் இந்தியா வழங்கியுள்ளது

5. இலங்கையிலிருந்து எரிக்கப்பட்ட பஸ்களுக்காக 500 புதிய இந்திய பஸ்கள் தருவிக்கப்பட்டுள்ளன [INDIA TODAY யிலிருந்து]

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:




மீரா

நரகர் முத்தையா வந்து போன நேரம் தொடக்கம் சிவகாமிக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை.

சொல்லி ஆறுதல்படலாம் என்டால் காலையோடு காலையாக வளை வைக்க நல்ல நேரம் பார்க்க சாத்திரியாரிட்டப் போன வேலுப்பிள்ளையும் வரவில்லை.

'பத்து மணிக் காகிதக்காரனும் வந்து போட்டான். இந்த மனுசன் என்ன செய்யுது' என்ற பரிதவிப்போடு புதுவீடு கட்டிமுடிக்கும் வரை பக்கத்தில் போட்ட சின்னக் குடிலுக்குள் போனவள்; உலையை இறக்கவும் என்ற நினைப்புடன்.

மகன் சின்னராசாவை எத்தனையோ கஷ்டப்பட்டு கிடந்த நகைநட்டுக்களை அடைவு வைத்து டென்மார்க்கிற்கு அனுப்பியதால் எழுந்ததுதான் அந்த வீடு. இன்னும் முகட்டு வேலைகளும் பூச்சு வேலைகளும் தான் பாக்கி.

செல்களுக்கும் பம்பர்களுக்கும் தப்பிய அந்த வீட்டின் ஆயுள் கூட நரகர் வந்து சொன்ன செய்தியால் முடிந்துவிடும் போல் தோன்றியது சிவகாமிக்கு.

'வாசிம்..... நரகர் பொடியனுக்கு முடிச்ச கையோட பெட்டைக்கும் முடிக்கிற நினைப்போட வாறீர் போல.....ஆனா வீடு இடிபூரவும் முடிய வேணும்...... பிள்ளையின்ர டிப்பிளோ-

படிப்பகம்

-மாப் படிப்பும் முடிய வேணும் .... இந்தாரும் வெதத்துத்தட்டு சந்தை கூடாததாலை வெத்திலையும் விலையாப் போச்சு.... மற்றது ஒரு வருசத்திலை இரண்டு நல்ல காரியம் செய்யக்கூடாது... சனங்களின்ர கண் பொசுக்கிப் போகும்..."

வந்த தரகரைச் சிவகாமி பேச விடவில்லை கொய்யகத்தை ஒரு செருகு செருகிக் கொண்டு, தொடர்ந்தாள்

"மற்றது கேட்டீரோ தரகர்... தம்பிக்கு இப்பிடி ஒரு சம்பந்தம் எண்டதாலை அண்ணை அயலவ எல்லாம் பெரிய எரிச்சல்.... மசிவாய்க் கொத்தலாம் எண்டு நினைச்சவை--- நீர் கொண்டுவந்த இடம் நல்லது எண்டதாலை ஓம் எண்டனான். இல்லாட்டி இன்னும் ஒரு லட்சம் கூட வேண்டியிருக்கலாம்.... தங்கம் தரகர் அவன்--- உரசி உரசி விக்கலாம்"

தரகருக்கு மிகவும் தர்மசங்கடமாக இருந்தது

"எங்கள் மூன்று பேருக்கும் நேற்றே பாஸ்போட் சரி எண்டு கொழும்பிலை இருந்து இராசமாணிக்கத்தார் எழுதினவர். அவையின்ர பகுதிக்கு என்ன மாதிரி ----- சொல்ல மறந்திட்டன்... தம்பியின்ர கடிதமும் நேற்று வந்தது. அவனுக்கும் வடபழனியில தாலி கட்டு எண்டது வலு சந்தோஷம் ----- சன்னதியான்ர வாசலில செய்ய வேணும் எண்டு நினைச்சிருந்தது... இப்ப வடபழனியானும் முருகன் தானே..." சற்று ஆறுதற்பட்டாள் சிவகாமி.

கடிதம் வந்தது எனச் சிவகாமி சொன்னதைப் பிடித்து விடயத்தை உடைக்கச் சுலபமாயிற்று தரகருக்கு.

"தம்பி எத்தினையாம் திகதி கடிதம் எழுதியிருக்கிறார்?"

"அது... போன மாசம் பதினைஞ்சு மட்டிலை------ பிரச்சினையால பிந்தித்தான் கிடைச்சது"

"உங்களுக்கு அதுக்குப் பிறகும் அங்கத்தை விசயங்கள் ஒண்டும் தெரியாதோ....?"

"ஏன்....?" சிவகாமிக்குள் ஒரு குருவல்.

"சொல்லக் கொஞ்சம் கவலைதானக்கா.... பிரச்சி

www.padippakam.com



முடியிறதாலை டென்மார்க் எல்லாரையும் திருப்பி அனுப்பப் போகுதாம் எண்டு பொம்பிளை பகுதியாக்களுக்கு ரெலிபோனில அங்கையிருந்து அறிவிச்சவையாம். தேப்பன்கார மனுசன் என்னை வந்து காவலை படுத்தபாலையோட பிடிச்சது....

சிவகாமிக்கு வியர்க்கத் தொடங்கியது.

"அதுதான் இஞ்ச வந்து இனி வேலை வெட்டி இல்லாமல் ..... அவை கொஞ்சம் சறுகினம் .... ஆனால் பயப்பிடாதையுங்கோ தம்பிக்குத் திறமாய் இன்னும் ஏதும் இடம் பார்ப்பம்."

வந்த விடயத்தைச் சொல்லி முடித்தாலும் தரகித் தொழில் தொடர்ந்தும் பேசியது.

சிவகாமிக்குக் கண்கள் கலங்கின. தரகருக்கு முன்னால் கண்ணால் கொட்டி விடுமோ என்ற தயக்கத்தில் "பொறுங்கோ தரகர் தேத்தண்ணி வைச்சுக் கொண்டு வாறன்" என எழும்ப, அந்தச் சங்கடத்திலிருந்து தப்பித்துக் கொள்ள தருணம் பார்த்த தரகரும் "எடுகனும் குடிக்கிறது தானே. எனக்கு அவசரம் பெரியபட்டணம் போற வேலையும் கிடக்கு வாறன்" எனக் கிளம்பினார்.

மகனும் டென்மார்க்கிற்குப் போய் காசு அனுப்பி வீடுகட்டும் தொடங்க. எட்டிப்போன சொந்தங்களும் நெருங்கி வர கூடவே வந்தது தான் அந்தக் கரவெட்டிச் சம்பந்தமும்.

காசாய் ஒண்டரையும் வீடு வளவு நகையுடன் சகோதரிக்கு ஐம்பதினாயிரம் இனும் எண்டதில் சிவகாமிக்கு மிகச் சந்தோஷம்.

"என்ன இதோட தம்பி விட்டிடுவானே.... வீடும் முடிய இன்னும் அவன். அரையோ முக்காலோ அனுப்பினான் எண்டால் பிள்ளையையும் ஒருத்தன்ர கையில குடுத்திடலாம் பிறகு நாங்கள் இரண்டு கட்டையள் தானே.

"அப்ப சிவகாமியக்கா.... சீதனத்தோட வாற பெட்டை பிறகு சகோதரிக்கு உதவும் எண்டு...."

படிப்பகம்

"இன்னச..... உதை துப்பிப்போட்டுச் சொல்லுது. கிணறாசாலை
நான் அப்பிடி வளக்கேல்லை. அத்தோட அந்தப் பகுதி
நாங்க கால் வைச்சு நெருங்கேலாத இடம். அந்தப்
பிள்ளையும் மிதிச்ச புல்லுச் சாகாது என்டு விசாரிச்ச
இடத்தில சனமெல்லாம் சொல்லுது".

இப்பிடியெல்லாம் பக்கத்து வீட்டுக்குப் பெண் கேட்கப் போன போது வீரியம் பேசிய சிவகாமி இப்போ இடிந்து போனாள்.

சம்பந்தம் குழம்பியது என்ட இடியையும் அவமானத்தையும் விட மகன் டக் கென்று திரும்பிவந்தால் குடும்பத்தில் எழப்போகின்ற பொருளாதாரப் பிரச்சனைகள் அவள் முன் பேயாக உருவெடுத்துப் பயம்காட்டின.

கட்டிமுடிக்கப்படாத வீடு... கட்டிக் கொடுக்க வேண்டிய மகள்.... அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை. இந்த இரண்டுக்கும் மேல இடி இப்படி விழும் என்று.

உலைவைக்கப் போன சிவகாமி எதுவும் தோன்றாததால் பிரமை பிடித்தது போல் அடுப்பு-க்கு முன்னால் குந்தியிருந்து யோசித்துக் கொண்டிருந்தாள்.

'இவன் டக்கென்டு டென்மார்க்கில இருந்து வேறு நாடுக-ளுக்குப் போனால் நல்லம் தானே.... என்ற ஒரு கணச் சிந்தனை. 'அந்த நாடுகளும் அனுப்பும் தானே' என்ற-தில் பின்வாங்கியது.

யோசிக்க யோசிக்க கண்ணும் எரிச்சல் காண தலையிடி வேறு தொடங்கியது. பார்வையை வெளியே திருப்பினாள்.

முகட்டு மட்டத்திற்கு வளர்-ந்துவிட்ட வீடு. நிலை வைத்த போது கட்டிய மாவிலைகள்

**கிழவி:**
சேலைக்குள் மறைந்திருந்த சோலைவனத்தின்
முகத்திரை விலகிய போதுதான் தெரிந்தது பாலைவனமென்று
ஏகாம்பரம்.

கூட இன்னும் நன்றி காய்ந்து போகவில்லை. அது அவரை நெருங்க வைத்தது.

"இதுக்காக போட்ட ஸ்ரெண்டரை கூட இருந்தால் அவன் வந்து கடையைக் கடையைப் போட்டு முதலைப் பெருக்கியிருக்கலாம்! மனம் அங்கலாய்த்தது மட்டுமன்றி வீடு கட்டும் பிரச்சனை எழுந்த போதே வேலுப்பிள்ளையர் இதைச் சொன்னவர்.


"சிவகாமி தேவையில்லாத ஒரு ஆட்டத்துக்கு வெளிக்கிடுறாய். உன்ர கணக்கிலை ஒரு 2½, 3. முடியும். அதை முதல் சேமிச்சு எங்கையெண்டாலும் வட்டிக்குக் கொடுத்திட்டு பிறகு அந்த வட்டியிலை கட்டிறதுதான் புத்தி."

"உங்களுக்கு எப்பவும் வியாபாரப் புத்திதான். நான் என்ன எனக்கே கட்டிறன். பிள்ளைக்குத்தானே"

"இல்லையடியாச்சி.... ஐஞ்சு பத்தை வைச்சுக் கொண்டு தொடங்காதை. ஆபத்து.... அதுதான் நான் சொல்ல வந்தனான்.

"என்னப்பா கதைக்கிறியள். ஊர் உலகத்திலை எல்லாம் கைக் காசையும் வைச்சுக் கொண்டே வீடு கட்டினம்"

அன்று தன் வாதத் திறமையால் வேலுப்பிள்ளையரை மடக்கினாலும் உண்மை இன்று அவளைச் சுட்டது. கூடவே பொசுக்கியது.









DANSK - TAMILSK
FØRSTEHJÆLP
- emneopdelt ordbog
Henrik Knudsen, Niels Dalager
Ingrid Wraa
Format: 16x23
272 sider
Pris incl. moms: 98,00

Oversættelse: Poopalasingam
Kalligrafi: Gerard John

www.padippakam.com



போற நேரத்திலை கூட சின்ராசா கேட்டவன் தான்,
"அம்மா, இந்தமாதச் சோதனையை எடுத்துப் போட்டுப் போறது-
ல் என்ன" என்று.

"தம்பி, அக்கம் பக்கத்தைப் பார். எல்லா வீட்டுப் பொடியளும் படிச்சுப் போட்டு போனவங்கள். அவனை நான் தான் சுட்டது இவனை நான் தான் சுட்டது என்று ஜேர்மனிக்குப் போய், அங்கையிருந்து எவ்வளவு கொட்டுறாங்கள்.

"அம்மா, இஞ்சை படிச்சுப்போட்டு அங்கை போறதாலை அங்கை பெரிய வேலை கிடைக்கப் போவதில்லை. ஆனால் ஒரு காலத்திலை இஞ்ச வந்து வேலை செய்ய-லாம்".

"தம்பி அறிவில்லாமல் கதையாதை. உனக்குக் கீழ ஒரு குமர் இருக்கிறதை மறந்துபோய்க் கதையாதை. நீயும் போய் நாலு காசு சம்பாதிச்சால்தான் அதுக்கும் ஒரு வழியைப் பண்ணலாம்."

போலிகளும் பொருளாதாரமும் ஒரே மேடையில் நடனமாடும் யாழ்ப்பாணத்துச் சூழ்நிலையில் சிவகாமி அன்று அப்படி ஒரு முடிவெடுத்தது தவறில்லை என்றாலும் படிக்க வேண்டிய ஒரு பொடியனைப் பாழாக்கிப் போட்ட ஒரு குற்ற உணர்வு அவளின் உள் மனதை உறுத்தியது.

மகனுக்கும் மனுஷனுக்கும் முன் கூனிக் குறுகி நிற்ப-தாக அவளுள் ஓர் உணர்வு.

வெளியே நாய் குலைத்துக் கேட்-டது. வேலுப்பிள்ளையர் வாறார் என்ற நினைப்பில் ஓடி வந்தாள். அங்கு யாரையுமே காணவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தாள். நாய் பதுங்கு குழியைச் சுற்றிச் சுற்றி வந்து குலைத்துக் கொண்டிருந்தது.

கிட்டச் சென்று பார்த்தாள். அதற்குள் நாயுடன் விளையாடிய ஆட்டுக் குட்டி விழுந்து கிட-ந்தது. வெளியே வருகிற யோசினையும் இல்லாமல் அதுக்கை இருந்து கிடக்கிற பயமும் இல்லாமல் ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருந்தது.

www.padippakam.com


அது வெளியேற முயற்சிக்கவோ சத்தம் போடவோ இல்லை.

அது சிவகாமிக்குக் கொஞ்சம் வியப்பாய் இருந்தாலும் ஏற்கனவே தனிமைகளில் ஆழ்ந்திருந்த சிவகாமி, "சனியன்களின் உபத்திரவம் வேறு" என்று ஒரு கல்லை எடுத்து நாயைக் கலைத்துவிட்டு ஆட்டுக் குட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தாள்.

"நேற்றே கிடங்கும் படி அதில் இரண்டு வாழையும் வைக்க வேணும்" என்டு சொன்னவர் என நினைத்துக் கொண்டு வந்தவளை ஒழுங்கையில் கேட்ட கிடிகாரக் கணபதியின் அரசியலும் கூடவே இத்தல கதையும் தனியே நின்ற சிவகாமியைப் பயப்பிட வைத்தது.

"கள்ள வடுவாக்கள்.... என்ன துணிவு இருந்தால் அவளில் கை வைப்பாங்கள். அவன் தான்?.... இந்திரா காந்தியிடமோ.... அவரிக்கும் வேணும்.... இந்தக் கெட்ட நாயளோட சமாதானம் பேச வந்தவர்...... உப்பிடித்தான் சில பேர் இடம் வலம் தெரியாமல் சம்பந்தம் பேசிப்போறது.

சிவகாமிக்குத் 'திக்' என்றது.

பின்ராதாவுக்குப் பேசிவந்த பொம்பிளைகளில் கணபதியின் மகளும் ஒருத்தி.

சிவகாமிக்கு வெறிகாரன் உள்ளே வந்து கதைச்சாலும் என்டு பயம்.

காலையில் இருந்து எல்லாப்பிரச்சனைகளையும் தத்தளிக்கும் சிவகாமிக்கு இது வேறு வயிற்றைக் கலக்கியது. அவளுக்கு ஓவென ஒப்பாரிவைத்துக் கூற வேண்டும் போல் இருந்தது.

தானும் மேலே மேலே பறக்க வேண்டும் என்ற ஆசையால் தன் நிலையையே தவறவிட்ட சராசரி மனித ஜீவிகளில் ஒருத்தியான சிவகாமியைத் தன்னந்தனியே வைத்துத் தன்மானம் கைகொட்டிச் சிரித்தது..... வெருட்டியது..... பயங்காட்டியது.

படிப்பகம்

www.padippakam.com


அவளால் தனியே வீட்டினுள் இருக்க முடியவில்லை. மன ஆறுதலுக்குப் பக்கத்து வீட்டுக்கு ஓடிப்போய்க் கதைப்-போம் என்றால் தன்வாயாலேயே தனக்குப் போட்ட கொங்-கிறீற் சுவர்கள் அவளைத் தடுத்தன.

மெதுவாகக் கடிகாரக் கணபதி போட்டானோ என வேலியிடுக்கினூடாக பார்த்தாள்.

சிவகாமியில் இருந்த கோபத்தை எல்லாம் காட்ட ஒரு பெரிய கல்லை எடுத்து சிவகாமி வீட்டு நாயைக் கலைத்-துக் கொண்டிருந்தாள்.

தூரத்தே நாய் ஓடிவிட்டாலும் அது நாயின் பின்னங்-காலில் பட்டது. நாய் வாள் வாள் எனக் கத்திக் கொண்டு வேலிப் பொட்டினூடு பாய்ந்தது.

அந்தக் கல்லெறி அவளுக்குப் பட்டதற்குச் சரியாக அவளின் உள்மனம் துடித்தது.

அந்தத் துடிப்புக்களில் அவளின் இதயமே நின்றுவிடும் போல் ஓர் உணர்வு.

வேலியைப் பிடித்துக் கொண்டு நின்ற சிவகாமியைப் படபட என்ற சத்தத்துடன் வந்து வீட்டுவாசலில் நின்ற மோட்டார் சைக்கிள் பதட்டப்பட வைத்தது.

வாசலுக்குப் போனாள்.

மோட்டார் சைக்கிளில் இருந்து இரண்டு இளைஞர்கள் இறங்-கினார்கள்.

"சின்னராஜா வீடு இது தானே"
"ஓம்...ஓம்.. என்ன விசயம்..." பதகளித்துப் போனாள் சிவகாமி.

"இந்தாங்கோ ஒரு கடிதம் மகன் தந்தவர்" எனக் கொடுத்தார்கள்.

கடிதத்தை வாங்கிய பதட்டத்தில் வந்தவர்களை வாங்கோ இருங்கோ சொல்ல முதல் அவர்கள் போய்விட்டனர்.

கடிதத்தை முற்றத்தில் நின்றவாறே அவசர அவசரமாகப் பிரித்தாள்.

www.padippakam.com



அன்புள்ள அப்பு, அம்மா, தங்கச்சி.

........

........ இழம்பியிருக்கும் எனத் தெரியும். இனியாவது பெண்மார்க்களைக் கலியாணம் கட்டிற பொம்பிளை இல்லாமல் இன்ராசாவை கட்டிற ----

........ உங்கடை பதுங்கு குழிகள் மூடிய பின்பும் ........

........ இங்கென்ன பதுங்கு குழிகள் மிகத் திறமானவை. வெளியே வர விருப்பமில்லாவிட்டால் உள்ளே படுத்துத் தூங்கலாம். பணம் வரும். எல்லாம் வரும். ஆனால் வாழ்க்கை வராது.

கடிதம் வாசிப்பதைச் சற்று நிறுத்தி பதுங்கு குழியில் இருந்த ஆட்டுக்குட்டி வெளியே வர முயற்சியாது அதற்குள் பேசாமல் நின்றதை ஓர் தடவை நினைத்துப் பார்த்தான்.

பின் தொடர்ந்து படித்தான். ----

இனி ஒரு பதுங்குகுழி வெட்டவோ அன்றிப் பதுங்கு குழிகளைத் தேடிப் புறப்படவோ தேவையில்லாத ஒரு சமுதாயத்தை கட்டி எழுப்பவும் மடிந்து போன பல போராளிகளுக்குப் பெரிய புதை குழி வெட்டவும் இனி எம் பங்களிப்பு மிக அவசியம் ........ எனக்கு விருப்பமான முரல்புட்டும் ஒடியல் கூழும் உங்கள் கைகளால் குடிக்க ஓடோடி வருவேன்.

உங்களன்பு மகன்,
சின்னராசா

கடிதத்தை வாசித்து முடித்த சிவகாமியின் உடம்பெல்லாம் புல்லரித்தது.

கண்களிரண்டாலும் ஓடியது.

"என்ரை கலிதீர்க்க வந்த குஞ்சு" என பரவசப்பட்டபடி செய்தி கூறப் பக்கத்து வீடுகளுக்கு ஓடினாள்.

தன்னையறிந்தவருக்கு இப்போ எந்தத் தடையுமில்லை. ஒழுங்கையில் வேலுப்பிள்ளையர் அட்டகாசமாகச் சிரித்தபடி வந்தார். "வீடு வைக்க நல்ல நேரம் பார்த்தாச்சு" என்றபடி -


(யாவும் கற்பனையே)

படிப்பகம்

www.padippakam.com



## கூட்டல், கழித்தல் ஞாபகமிருக்கா?





சரியான விடை அனுப்பியோர்:
C.M. ராம்குமார், துரைசிங்கம், கிங்ஸ்லி ரமேஷ் உஷா கிறேஸ், சாரதாதேவி.பா, R.S. ஹரன், அமலதாசன், க. தாமோ, N.K. தர்மராஜா, நித்யா, ஜெயரட்ணம், சிவகுமார், பாலா, தாசன், பாஸ்கரன்

பரிசு பெறும் அதிஷ்ரசாலி:
N.K. தர்மராஜா.
PORSVÆNGET. 3, 1th.
7400 HERNING.

இதுவரை ஓசையில் ஓவியம் வரைந்து வரும் ஓவியர் சிவா அவர்களைக் கௌரவப்படுத்த எண்ணி அவரின் மைந்தன் செல்வன் உதயனைக் கொண்டு குலுக்கல் முறையில் அதிஷ்ரசாலி தெரிவு செய்யப்பட்டுள்ளார். 12 வயதான உதயன் HOLSTBRO ST. Johns கல்லூரியின் 6ம் வகுப்பு மாணவன். இச்சிறுவனே இவ்விதழின் பின்அட்டைப் படத்தை வரைந்தவராவார்.

# ஆழக்கடல் தாண்டி

## மீன் பிடிப்போம்




முதற்பரிசு 30 Kr.
இரண்டாம் பரிசு 20 Kr.

1. ஆளுக்கு 3 மீன் கட்டாயம் பிடிக்க வேண்டும்.
2. B பிடித்த மீன்களைவிட A பிடித்த மீன்களின் எடை (B) அதன் அரைவாசியாகும்.
3. C பிடித்த மீன்களின் எடை என்ன?

(விடைத்தாள்களில் தயவு செய்து முகவரியிடவும்)

படிப்பகம்

www.padippakam.com

THE EDITOR:-
MEERA.
P.O.BOX 334
4000 ROSKILDE
DENMARK



THE PUBLISHERS:-
D·F·H
KAMSTRUPVEJ—55B
4000 ROSKILDE
DENMARK

படிப்பகம்